உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்


**Vol. 6** | **January 1944** | **No. 1**


விஷய சூசிகை. பக்கம்


| | |
|---|---|
| வைத்தியச்செய்திகள் | 1 |
| பிளேக் நோயும் அதன் சிகித்சையும் | |
| கரூர் வைத்ய வாசஸ்பதி, பண்டிட். | |
| P. S. ராமசர்மா அவர்கள்) | 1—14 |
| யோகரத்நாகரம் | 85—86 |
| ஓர் க்ஷாத்ரரோகம் | |
| (திருச்சி வைத்ய வாசஸ்பதி | |
| V. B. நடராஜசாஸ்திரிகள் அவர்கள்) | 15—16 |



**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

**கிடைக்குமிடம்:—**

**Pandit, S. NARAYANA IYENGAR.**
**Editor and Publisher.**
No. 2, Police Station West Lane, Madura.

ரைட்] [விலை 0—3—0

ங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—44.

## வைத்தியச் செய்திகள்

**திருச்சி ஆயுர்வேத ஸபை**—சென்ற வருஷம் நவம்பர் மாதம் 20ௗ நடந்த ஷை சபாவின் வருஷாந்தரக் கூட்டத்தில் கீழ்க் கண்டபடி நிர்வாகஸபை 1943—44 வருஷத்திற்குத் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கிறது. (1) ஸ்ரீ L. V. மஹாதேவசர்மா வைத்யவிசாரத ஆயுர்வேத சிரோமணி) ஸபாத்யக்ஷர் (2) ஸ்ரீ T. S. ஈசுவரய்யர் L. I. M. ஸபாமந்திரி, மற்ற கமிட்டி மெம்பர்கள் (3) ஸ்ரீ P. G கண பதிசாஸ்திரிகள் (4) V. R. சுப்ரஹ்மண்ய அய்யர், (5) ஸ்ரீ R. V. ராமன், ஸாஹித்ய ஸ்ரீ ஆயுர்வேத சிரோமணி.

1943ஹு டிஸம்பர்மீ 20ௗ திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு ஷை ஸபையின் 11-வது வருஷத்திய முதல் மாதாந்தக்கூட்டம் திருச்சி ஆயுர்வேத யூனியன் கட்டிடத்தில் கூடியது. அவ்வமயம் ஸ்ரீ **T. S. ஈஸ்வரன்** L. I. M. அவர்கள் **"அன்னபானங்கள் உபயோகம்"** என்பதுபற்றித் தமிழில் ஒரு வியாஸம் வாசித்தார். அதற்கு ஸ்ரீ **L. V. மஹாதேவ சர்மா**, வைத்ய விசாரத ஸ்ரீ ஆயுர்வேத சிரோமணி, தலைமை வகித்தார். கூட்டத்துக்கு மெம் பர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். சிறிது நேரம் சர்ச்சை நடந் ததும், வந்தனோபசாரத்துடன் கூட்டம் நன்கு முடிவுற்றது.

T. S. ஈஸ்வரன்,

ஸபாமந்திரி.

---

**மதுரை ஸ்வதேசவைத்திய சபா**—ஷை சபையின் ஆதர வில் 1943ஹு டிசம்பர்மீ 26ௗ ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு காக்காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் சபைத்தலைவர் டாக்டர் **V. சாமிநாதய்யர்** அவர்கள் தலைமையில் மதுரை கேரளீய ஆயுர்வேத ஸமாஜம் பிராஞ்சு, பிரதான டாக்டர் ஆரிய வைத்யன், ஸ்ரீமான் வாரியர் அவர்கள் **ஆயுர்வேதத்தின் பெருமை** என்பதைப்பற்றி விரிவாக உபந்யசித்தார்கள்.

# பிளேக் நோயும் அதன் சிகித்சையும்.

(கரூர் வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா)

*அவர்கள் திருச்சி ஆயுர்வேத் சபையின் 10-வது ஆண்டு விழாவின் போது செய்த உபன்யாசத்தின் சுருக்கம்.*

பெரியோர்களே அறிவாளிகளே இன்று நமது சபையின் 10-வது ஆண்டு பூர்த்தியில் தற்சமயம் உலகத்தில் பல இடங்களில் வியாபித்துப்பொதுஜனங்களைக் கூரையாடிவரும் யுத்தம்போன்ற ஒரு கொடிய நோயாகிய அக்னி ரோஹிணி என்ற பிளேக் நோயைக் குறித்துச் சிறிதுநான் தங்கள் முன்னிலையில் சொல்ல உத்திரவிடப் பட்டிருக்கிறேன். உலகத்தை அழிப்பதற்காகக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட கொள்ளை நோய்களுக்குப் பொதுவாக மகாமாரி என்று கூறலாம் ஒரேகாலத்தில் ஒரே உருவத்தில் பலருக்குந்தோன்றி மாணத்தை விளைவிப்பது இந்நோய்களின் தன்மை. அவைகளில் மிகவும் கொடியது அக்னி ரோஹிணியாகும். தவிர இந்நோயில் காணும் கட்டிகள் நெருப்புபோல் சிகப்பாகத் தகதகவென்று தகித்துக்கொண்டு கிளம்புவதால் இதற்கு அக்னி ரோஹிணி என்ற நாமம் பொருந்தும், தவிரவும் இந்நோய்கண்டவுடன் மிகவும் உக்ரமான சூடு (ஜுரம்) உடம்பில் தென்படுவதாலும் இப்பெயர் சரியானதே. இதை அனுசரித்தே வாக்படர்—"மலே; பித்தோல்பணே; ஸ்போடா; ஜ்வரிணோ மாம்ஸதாரணா:| கக்ஷாபார்ஸ்வேஷு ஜாயந்தே யேக்ந்யாபாஸ்ஸாக்நி ரோஹிணீ | பஞ்சாஹாத் ஸப்தராத்ராத்வா பக்ஷாத்வா ஹந்தி ஜீவிதம் என்று கூறினர் (இதிலிருந்து இந்த வியாதி தற்காலம் ஆங்கிலத்தில் கூறப்படும் பிளேக் நோய் அல்லவென்று சிலர் அபிப்ராயர்) இதனால் வியாதியின் பரிசயம் ஏற்படுகிறது. தற்காலம் ஆங்கிலத்தில்தான் உலகத்தில் இருக்கும் எல்லாப்பொருள்களையும் தெரிந்துகொள்ள நம்மால் முடிகிறது. தேவபாஷையாகியஸம்ஸ்க்ருதத்தில் அறிந்துகொள்ள முடியாமல் போனாலும் தேசபாஷையிலும் தெரிந்துகொள்ள முடியாமல் போனது மிகவும் வருந்தத் தகுந்ததே. ஆங்கிலத்தில் இந்நோய்க்கு என்னபெயர் என்பதைத் தீர்மானம் செய்யாவிடில் நம்மால் வைத்யம்செய்யவே இயலாத காலமாக இருக்கிறபடியால் அதைக் குறித்துச் சிறிது சிந்திப்போம் ஆங்கிலத்தால் "பிளேக்" என்று ஓர் கொடிய நோய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1896 வருஷம் Kitasato என்று ஒரு ஜப்பானியர் பொதி ஒரு விஷப்பூச்சியால் பரவுவதாகக் கண்டுபிடித்தார் இக்

நோய்க்குக் குறித்திருக்கும் லக்ஷணங்கள் அக்னி ரோஹிணிக்குப் பொருந்தி இருப்பதாக இருந்தால் அக்னி. ரோஹிணியே பிளேக் என்று தீர்மானிக்கலாம். ஸ்ரீ கணநாதஸேனன் அவர்கள் எழுதியிருக்கும் சித்தாந்த நிதானத்தில் டைபாய்டு, டிங்குபீவர், பிளேக், முதலிய நோய்கள் புதிதாகத்தோன்றினவை என்றும் முன் நாளில் கிடையாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. (1) புராணு: ப்ரவிலியக் தேநவிநா: ப்ராதுராஸதே என்று சொல்லுகிறார் ஏன் என்றால் அஷ்டாங்கஹிருதயத்தில் "விகாரநாமாகுசலோ நஜிஹ்ரீயாத் கதாசந । நஹிஸர்வவிகாராணும் நாமதோஸ்தி த்ருவாஸ்திதி" என்று சொல்லப்பட்டிருப்பதால் அநேகம் நோய்கள் புதிதாகத் தோன்றலாம் (2) தற்காலம் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல அக்னி ரோஹிணி முதலிய நோய்களுக்கு நம் முன்னோர் விஸ்தாரமான லக்ஷணம் முதலியதையும் சொல்லவில்லை (3) சுசுருதத்தில் அக்னி ரோஹிணி அசாத்யம் என்று சொல்லிவிட்டார் தற்சமயத்தில் காணும் பிளேக் நூற்றுக்கு 25 ஆவது உயிர் தப்புகிறது (4) பூச்சிகளால் (ஜீவாணுக்கள் அணுஜீவன்கள்) பிளேக் ஏற்படுகிறது. அக்னி ரோஹிணி அவ்விதம் ஏற்படுவதாகக் கூறப்படவில்லையே (5) ரோகம் எலிகளுக்குத்தோன்றிப் பிறகு அதிலிருந்து பரவுவதாக அக்னி ரோஹிணி சொல்லப்படவில்லையே. இதைக் குறிக்கும் சித்தாந்த நிதானத்தில் "நிதானமத்ர ஸாமான்யம் ஸங்குலாவாஸதாதிகம் । விசிஷ்டம் விஷமஸ்ராணுசரம் ஜீவாணு ஸம்பவம் । தேஸ்பர்ச ச்வஸநாதிப்ய: ஸங்க்ராமந்தி நராந்தரம் । பூம்ராதத்ரோக ஜுஷ்டேப்யோ மூஷிகேப்யச்ச ஸம்பவ:" என்று கூறப்பட்டிருக்கிறது (6) பிளேக் மிகவும் கொடியநோய் அக்னி ரோஹிணி க்ஷுத்ர ரோகத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அல்பமான நோய் என்றல்லவோ தோன்றுகிறது (7) பிளேக் ஸாங்க்ரமிக ரோகம் அக்னிரோஹிணி அவ்விதம் சொல்லப்படவில்லை இவ்விதம் பல காரணங்களால் இந்நோய்கள் வெவ்வேறு என்பதைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஆகையால் ஆங்கில வைத்தியரிடம் சென்று இந்நோயைப்பற்றி நன்றாகக் கற்று பரிஹாரம் தெரிந்துகொள்ளுவதுதான் சரி என்று தோன்றுகிறது. வாக்படர் "சிகித்ஸா சாஸ்திரமகிலம் வ்யாபட்ய பரிதஸ்ஸ்திதம்", என்று சொல்லியிருந்தாலும் அந்தக்காலத்தில் ஆங்கில வைத்

யம் ஏற்படாததால் "அனுக்தமப்யதோ க்ராஹ்யம்" என்ற வசனத்தை அனுசரித்து ஆங்கிலேயரால் சொல்லப்பட்டிருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளுவதுதான் உசிதமா? அல்லது நமது புத்தியை நமது சாஸ்திரங்களில் சிறிது நுழையும்படி செய்து மஹர்ஷிகள் முக்காலம் அறிந்தவர் என்ற நம்பிக்கையைக் கைவிடாமல் கொஞ்சம் பிரயத்தனப்படுவது சரியா? நமது உடம்பில் விச்வாமித்ரர் முதலிய மஹாரிஷிகளின் ரக்தம் ஓடுவது உண்மையானால் நமது புத்தி அவர்களின் வார்த்தையை நம்பி அவர்களின் கிரந்தங்களில் பரிசிரமப்பட்டு அவைகளில் இல்லாதது ஒன்றுமில்லை என்று "யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி நதத்க்வசித்" என்ற சரகவசனத்தை அவலம்பிப்பதுதான் யுக்தம். ஆகையால் பிளேக், டைபாய்டு, முதலிய நோய்கள் நமது சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லை என்று சொல்லுவது நமக்கு மிகுந்த பயத்தையும் வெட்கத்தையும் உண்டுபண்ணுகிறது. அல்ப அறிவாளியான நாம் ஸர்வக்ஞனான ஈச்வரன் முகத்திலிருந்து வந்த வேதத்தில் குறை கூறுவது எவ்வளவு விந்தை நமது சாஸ்திரத்தை நாம் சரியாகப் படிக்காமல் கேவலம் பிரத்யக்ஷப் பிரமாணத்தை மட்டிலும் ஆதாரமாகக்கொண்ட ஆங்கிலேயர் அறிவில் மோஹம் கொள்ளுவது நமது அவிவேகமே. ஆகையால் முன் சொன்னவைகளைப் பூர்வபக்ஷமாக வைத்துக்கொண்டு விசாரிப்போம் ஸ்ரீ கணநாதசேன் 'புராண—ஸம்ஹித" என்று சொல்லுவதற்குத் தனக்குப்பிரமாணமாகச் சரகத்தை இழுக்கிறார். "விகாரநாமா குசல: என்ற சுலோகத்தைத் தனக்குச் சாதகமாகச் சொல்லுகிறார். இப்படி சுலோகம் ஒரு வைத்யனுக்குச் சீக்கிரமாக வியாதியைக்கண்டு பிடிக்கமுடியாமல் போனாலும் தோஷகோபத்தைக் கவனித்துச் சிகித்ஸையைச் செய்யலாம் என்று சொல்லுவதற்காக ஏற்பட்டது அல்லாமல் வியாதிகள் புதிதுபுதிதாகத் தோன்றுகிறது பழையது எல்லாம் மறைந்துவிடுகிறது என்று அதன் பொருள் இல்லை, உண்மையில் ஆயுர்வேதப்படிப் புதிதான நோய் ஒன்றுமே தோன்ற முடியாது, எந்நோயானாலும் நோய்க்காகச் செய்யப்படும் சிகித்ஸை அந்நோயில் பிரகோபத்தை அடைந்திருக்கும் தோஷத்திற்காகத்தான் செய்யப்படுகிறது. ஆங்கில வைத்யத்தில் அவ்விதம் இல்லை. "ஸிம்ப்டமாடிக்" அதாவது குறிகளுக்குத்தான் வைத்யம்

தலே வலித்தாலும் கால்வலித்தாலும் அல்லது எரிச்சல் கண்டாலும் சீதளம்கண்டாலும் வலிக்கும் எரிச்சலுக்கும் சீதளத்துககும்தான் பரிஹாரமேயல்லாமல் வாயுவா, பித்தமா' கபமா என்பதை அவர்கள் சிந்திப்பதில்லே ஆகையால்தான் நாழிகைக்குநாழி அவர்களுக்குப் புதிதுபுதிதான நோய்களும் பரிஹாரங்களும்தோன்றிமறைகின்றன. நமக்கு அதுபோன்ற கிரமத்தை நம் முன்னோர் வைக்கவில்லே "புராணு" என்பதற்கு சுகதோஷம் கேஸஸீமந்தஙிரு த்ஜ்வரத்தை யும் "கோடாநாம் ச்யாவரக்தாநாம" என்பதும்தான் கிடைக்கிறது. வேறு ஒன்றும் கிடைக்கவில்லே. இதனல் இவரே நமது வழிக்கு வந்துவிட்டார் வியாதிகளின் சில குறிகள் மாறினதாகத்தான் இத னல் ஏற்படுகிறதே யொழிய வியாதிகள் மாறினதாகஏற்படவில்லே யேஎல்லாவியாகிகளிலும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட எல்லா லக்ஷணங்களும் காணவேண்டுமென்று நியமமில்லே. உதாஹரணமா கத்தற்காலம் அக்னிரோஹிணி ஜ்வரம் கண்ட சில மணிநேரத்திற் குக்கட்டிகள் உண்டாகாமலே மரணத்தை விளேவிக்கிறது. கட்டிஏற் படவில்லேயே அக்னிரோஹிணிஎன எவ்விதம் சொல்லுவது என்று கேட்பது சரியா? சரீரபலம் போராதவர்களுக்கும், ஸ்ரோதோ தோஷம் முதலிய கோளாறுகள் உள்ளவர்களுக்கும் ஊரில் அக்னி ரோஹிணி உள்ள காலத்தில் அதிகமான ஜ்வரம் உண்டாகி சன்னி பாத லக்ஷணங்களுடன் மரணம் ஏற்பட்டால் கட்டி யில்லாததினல் இது அக்னி ரோஹிணியல்ல என்று சொல்லமுடியுமா? கட்டி ஏற் படுவதற்கு முன்னமே ஜ்வரவேகம் மரணத்திற்குக் காரணமாய் விடுகிறது. அதுபோல் சில லக்ஷணங்கள் ஏற்படாமல் இருப்ப தனல் அவைகளும் மறைந்துவிட்டதாகச் சொல்லமுடியுமா? கேச ஸீமந்தம் என்பது ஜ்வரத்தில் காணும் ஓர் மரணக்குறி. ஷை குறி கண்டால் மனிதன் பிழைக்கமாட்டான் என்று இருக்கிறது அது ஒரு அரிஷ்டம், அது தற்காலம் அதிகமாகக் காணுவதில்லே, சாஸ் திரங்களில் கூறப்பட்டுள்ள மரணக்குறிகள் அனேத்தும் ஒரேகாலத் திலோ அல்லது ஒருவருடைய அனுபவத்திலோ வந்துவிடவேண்டு மென்ற நியமம் காணப்படவில்லே. ஒருவருடைய அனுபவத்திற் கோ அல்லது ஒரு காலத்திலோ காணப்படாத குறிகளும் வியாதி களும் கிடையாதென மறுக்கமுடியுமா? அபூர்வமாகச் சிலருக்கு ஸீமந்தலக்ஷணம் கண்டிருப்பதாக அனுபவத்தில் இருக்கிறது இரண்

டாவதும் "கோடாகாம்" என்பதும் லக்ஷணமே. அது சாதாரண மாக இன்று ஸந்ததஜ்வரம், சன்னிபாதம், முதலியவற்றில் காணப் பட்டுத்தான் வருகிறது. மிகுந்த அனுபவம் பெற்ற சித்தாந்த நிதானக்காரருக்கு இது தென்படாததின் காரணம் தெரியவில்லை. டைபாய்டில் rash என்றபெயருடன் கோடம் ஆங்கிலர்களாலும் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது புதிதாகத்தோன்றுகிறதென்பதற்குக்கொடுத்த உதாரணமும் சரியில்லை. பிரங்கரோகம் புதிதாகத்தோன்றினதென் கிறார். துஷ்டயோனியில் இருந்து ஏற்பட்ட வியாதிக்கு இப்பெயர் உண்மையானால் "யோனிப்ரதோஷாச்ச பவந்தி" என்று சாஸ்திரம் இதையே சொல்லுகிறது. துர்கடத்தை அதிகம் இருந்த வெளி தேசத்து ஸ்திரீகள் இவ்வூர்வந்து அவர்களின் சேர்க்கையால் இவ் வியாதி அதிகமாக எங்கும் பரவிற்று. ஆகையால் பிரங்கம் புதிது என்பது பொருந்தாது. "க்ராந்திக ஸந்நிபாதம்" என்று புதுப் பெயர் கொண்டிருக்கும் பிளேக் ரோகத்தைத்தான் தற்பொழுது நாம் எடுத்திருக்கும் அக்னி ரோஹிணி யென்று சொல்லப்போகிறோம். ஆதி சப்தத்தினால் இவர் மதப்படி "ஆர்த்ரிகோ க்ராந்திகச்சாபி ச்லேஷ்மகஸ் ஸந்திகஸ் ததா யச்ச ச்வலஸகோ நாம்நா க்ஷேபகோ யச்ச வைஷ்ணவீக:" எனப்புதுவியாதிகள் குறிப்பிடப்படுகின்றன. இவையெல்லாம் புதியவை அல்ல. புதிதாக வியாதிகள் எதற்கா கக்கண்டுபிடிப்பது என்றால் சிகித்ஸைக்காக என்கிறார், இது மிக வும் வேடிக்கையாக இருக்கிறது. "வியாதி ப்ரத்யநீக— உபயப்ரத் யநீக சிகித்ஸைக்கு வியாதி தெரியவேண்டும் என்கிறார். இவர் சொல் லுகிறபடி ஒத்துக்கொண்டால் ஆயுர்வேதத்திற்கே மூலநாசம் வந்து விடும். புது வியாதிக்குச் சிகித்ஸை ஆங்கில வைத்யப் படித்தான் செய்யவேண்டும். டிஜிடாலிஸ், புரோமைடு, முதலியவை உபயோகப் படுத்திச் சுதேச வைத்தியர்கள் சிகித்ஸைசெய்து கொண்ணுவதால் அது ஆயுர்வேத சிகித்ஸையாகாது. ப்ளேக்கிற்கு (க்ராந்திக சன்னி பாதத்திற்கு) வியாதி உபய ப்ரத்யநீக சிகித்ஸைகள் என்னவென் பது ஆயுர்வேதத்தில் எங்கே சொல்லப்பட்டிருக்கின்றது என்று கேட்கிறேன். ஆகையால் தனியாக அங்கீகரிப்பதால் அந்திவார [illegible]விடுகிறது இரண்டாவதாக நமது சாஸ்திரங்களில் பிளேக் முதலியவற்றிற்கு ஆங்கிலத்தில் போல விஸ்தாரமாக லக்ஷ-

ணங்கள் சொல்லப்படவேண்டிய அவச்யம் இல்லை. ஒவ்வொரு தோஷங்களின் பிரகோபத்திலும், த்வந்தப்ரகோபங்களிலும், சன்னிபாதங்களிலும், ஏற்படும் குறிகள் மிகவும் விஸ்தாரமாக சாஸ்திரம் ஸம்பத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றன. பிறகு சன்னிபாதத்தால் ஏற்படும் வியாதிகளுக்கு விசேஷ லக்ஷணங்களைத்தவிர சாமான்ய லக்ஷணங்கள் எதற்காகச் சொல்லவேண்டுமோ? காகிதப்பஞ்சம் அச்சுப்பஞ்சம் முதலியன இப்பொழுதே இருக்கிறதே. காகிதம் இல்லாத காலத்தில் நிஷ்பலமாக வளைத்து வளைத்து எழுதிப் புஸ்தகத்தைச் சுமக்கமுடியாமல் செய்வதற்கு அவர்கள் விரும்பவில்லை சன்னிபாதங்களைப் பலவகையாகப் பிரித்து அவைகளின் லக்ஷணங்களைப் பூராவாகவும் சொன்னபிறகு சன்னிபாதத்தினால் ஏற்படும் மற்றவியாதிகளில் எதற்காக விசேஷலக்ஷணத்தைத் தவிர சாமான்யலக்ஷணங்களைச் சொல்லவேண்டும். சித்தாந்த நிதானத்தில் புதிதாகப் பிரிக்கப்பட்ட வியாதிகளுக்கு ஆங்கில ஆராய்ச்சிப்படி சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணங்கள் சன்னிபாதம் விகிருதி விஞ்ஞானீயம் முதலியவைகளில் சொல்லப்பட்டவைகளுள் சில அம்சங்களேயல்லாமல் புதிது ஒன்றுமில்லை 3-வதாக சுச்ருதத்தில் அசாத்யமாக கூறப்பட்டிருப்பது ஒரு காரணமாகக் கருதுகிறார். அப்படி இருந்தால் சிகித்ஸை எதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று விளங்கவில்லை."அஸாத்யாம் ஸந்நிபாதத" என்றுதான் சொல்லியிருக்கிறார் சன்னிபாதங்கள் எல்லாம் அஸாத்யமானாலும் சரியான சிகித்சையாலும் சில பலாபலத்தாலும்சித்திக்கிறது போல இதிலும் சிலசௌகர்யப்படும் என்பதுதான் பொருள். நான்காவதாக—பூச்சிகளால் உண்டாகிறது என்பது நமது சாஸ்திரப்படியும் தெரியவருகிறது. ஆனால் சிகித்ஸையில் உபயோகமில்லாததினாலும் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் விஞ்ஞானங்கள் எல்லாக்காலத்திலும் இருக்கமுடியாததினாலும் சாமான்ய மனுஷ்ய சக்திக்குத் தெரியக்கூடியவைகள் தான் இவ்வுலகத்திற்கு எப்பொழுதும் ஸ்திரமாக உபயோகப்படும் என்பதாலும் மிகவும் விரிவாக கவிஞர்கள் கணக்குப் பார்ப்பதுபோல் முன்னோர்கள் நக்ஷத்ர பரிகணனம் செய்யத்துணியவில்லை. மஹாமாரிகள் குஷ்டம்போன்ற எல்லா ஸாங்க்ராமிக ரோகங்களும் கிருமிகளால் தான் பரவுகின்றன என்பதற்கு நமது சாஸ்திரத்தில் பிரமாணம் இருக்கிறது. "அபாதா ரக்ததாப்ச

ஸௌக்ஷ்ம்யாத் கேசித் அதர்சகா" என்று சொல்லிவிட்டு ஸாங்க்ராமிக ரோகங்களை கணக்கு எடுக்கும்பொழுது முதலில் குஷ்டத்தையே குறிப்பிட்டார்கள். தவிர பராசர ஸம்ஹிதையில் பூச்சிகளால் (ஜீவாணுக்களால்) உண்டாகும் வியாதிகளைக் குறித்து மிகவும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐந்தாவதாக இவ்வியாதி எலிகளிலிருந்து உண்டாகிறது என்பதே பொருத்தமற்றது. ஆங்கில மதத்தில் இந்நோய் எலிகளுக்கு முதலில் காணுவதால் எலிகள் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறதென்றே சொல்லப்படுகிறது, எலிகள் இல்லாத விடத்தில் இந்நோய் காணுவதில்லை எனச்சொல்லமுடியாது. ஆகவே இதை யொட்டி எழுந்துள்ள பிரச்னையும் அசங்கதமாகிறது. 6-வதாக க்ஷுத்ரரோகம் என்றால் அல்பரோகம் என்று பொருள் சொல்லுவது பொருந்தாது. அல்பரோகமானால் அஸாத்யம் என்று சொல்லவேண்டிய அவசியமே இல்லை. தவிர க்ஷுத்ரம் என்றால் ரௌத்ரம் என்றும் அர்த்தம் உண்டு "அபி க்ஷுத்ர மிருகா: யத்ர சாந்தா: சேரு: ஸமம் மிருகை:" இது முதலிய இடங்களில் குரூரம் என்றும் அர்த்தம் ஏற்படுகிறது மேலும் மாதவநிதானம் க்ஷுத்ரரோகங்களைச் சொல்லும் அத்யாயத்தின் முதல் சுலோக வியாக்யானத்தைப் படித்தவர்கள் முன்சொன்ன பொருளைக்கண்டு நகைக்கநேரிடும். "நநு யதி க்ஷுத்ரத்வ மேஷாம் ஹேது லக்ஷண சிகித்ஸால்பத்வேந, தர்ஹி அக்னி ரோஹிணி வல்மீகாதீநாம் ஹேத்வாதி பாஹுல்யாத் கதம் க்ஷுத்ரத்வம்" இதன் பொருள்—"க்ஷுத்ர" பதத்திற்கு அல்பமென்ற பொருள் சொன்னால் இங்கு ஓர் கேழ்வி பிறக்கிறது. அதாவது வியாதிகளின் ஹேது, லக்ஷணம், சிகித்சை இவைகள் அல்பமாக இருப்பதால் இவ்வத்தியாயத்தில் சொல்லப்படும் 44 ரோகங்களுக்கும் க்ஷுத்ர ரோகங்களெனப் பெயர் கொடுப்பது சரியல்ல. ஏனெனில் இந்த ரோகங்கள் 44-ல் "அக்னி ரோஹிணி" "வல்மீகம்" போன்ற நோய்கள் ஜ்வரம், அதிசாரம் முதலிய நோய்கள் போல விஸ்தாரமான ஹேதுக்கள், லக்ஷணங்கள், சிகித்சைகள் உள்ளவைகளாதலால் முன்சொன்ன அல்பத்வம் இவைகளுக்கு எவ்விதம் பொருந்தும்? என்ற கேழ்வி பிறக்க அதற்குச்

சமாதானம் அடுத்த வரியில் காணப்படுகிறது. அதாவது—"கைவஞ், சத்ரிஜோ கச்சந்திதிவத்" இதன் பொருள்—முன்கேட்ட கேள்வி சரியல்ல. ஒரு பெரிய ஜனக்கூட்டம் வழி நடக்கும்போது பலர் குடைபிடித்தும் சிலர் குடை பிடியாமலும் இருக்கும் நிலைமையில் "குடை பிடித்தவர்கள்" என்று பொதுவில் சொல்லுவதுபோல இங்கும் பெரும்பான்மையான நோய்களுக்குள்ள அல்பத்வத்தை நினைத்து இப்பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால் முன் சொன்ன அக்னி ரோகிணீ, வல்மீகம், (வல்மீகம் என்பது புத்துநோய், இதை ஆங்கிலத்தில் Cancer என்று சொல்லுவார்கள்) முதலியவைமஹா ரோகங்களே என்பது முன் வாக்யத்தின் பொருள். இங்கு மறுபடியும் ஓர் கேள்வி உதிக்கலாயிற்று. அதாவது மகாரோகங்களாகிய அக்னி ரோஹிணீ முதலியவைகளை ஏன் அல்பரோகங்களுடன் சேர்த்துச் சொல்லவேண்டுமென்பதே. இந்தக்கேள்வியை நினைத்து வியாக்யானம் எழுதியவர் க்ஷுத்ரரோகங்கள் என்பதற்கு வேறு அர்த்தம் சொல்லுகிறார். அதாவது—அவாந்தரபேதவிரஹ: க்ஷுத்ரத்வம், யேஷாத்ர வக்தவ்யாநாம் அஜகல்லிகாதீநாம் ந தோஷ தூஷ்யாதி க்ருத பூரி ஸங்க்யா பேதேநவ்ரணஜ்வராதிவத் நிர்தேச:, கிந்து ப்ரத்யேகம் ஸ்தோக ஸங்க்யயா அபிதானம் தேஷாம்". இதன் பொருள்-க்ஷுத்ரம் என்ற பதம் "உள் பேதமற்றது" என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. விரணம், காய்ச்சல் முதலியரோகங்களில் திரிதோஷங்கள் தூஷ்யங்கள் (ரஸாதிகள்) இவைகளின் பேதத்தால் காய்ச்சல் எட்டுவிதம், ஐந்துகாஸம், 13 சன்னிபாதம், என்ற விதமான உள் பேதங்களை யொட்டிய அதிக எண்ணிக்கை சொல்லப்படுவதுபோல அஜகல்லிகை முதலிய ரோகங்களில் சொல்லப்படுவதில்லை. ஆனால் இவைகளில் கொஞ்ச எண்ணிக்கையே சொல்லப்பட்டிருக்கின்றது. என்பது பொருள். இந்த நிரூபணத்தால் "அக்னி ரோகிணீ" என்பது அல்பரோகமல்லவென்பதும் மகாரோகம் என்பதே கிரந்தங்களின் அபிப்பிராயமெனவும் ஏற்படுகிறது. 6-வது இந்நோய் ஸாங்கிராமிக ரோகம் என்பதற்கு இதன்பேரே போதுமானது. "அனுக்தமன்யதோ" க்ராஹ்யம்" என்பதற்கு ஸமானமான ஆர்ஷகிரந்தங்களிலிருந்து எடுத்துக் கொள்ளுவது என்றுதான் பொருள். ஆபஸ்தம்பர் சொல்லாததை போதாயனத்தி

விருந்து எடுத்துக்கொள்ளு[illegible]தில் சொல்லாதவற்றை சுச்ருதம், பேடம், காச்யபீயம், பாராசர்யம், முதலியவற்றிலிருந்து எடுத்துக்கொள்வது என்றுதான் பொருள். ஆகையால் சித்தாந்த நிதானக்காரர் அபிப்பிராயம்போல புதிதுபுதிதாகவியாதிகளை உண்டு பண்ண முடியாது. முன் சொன்ன காரணங்களால் தற்சமயத்தில் பிளேக் என்று சொல்லப்படும் நோய் நமது முன்னோர்கள் சொல்லி யிருக்கும் அக்னி ரோஹிணியேயாகும் வேறில்லை விஸ்தரபயத்தால் இந்த விவாதத்தை நிறுத்தி நமது சன்னிபாதங்களில் சொல்லி யிருக்கும் குறிகளை ஆங்கிலேயரால் இதற்குச் சொல்லப்பட்டிருக் கிறது என்பதை மேல் சொல்லப்படும் லக்ஷணங்களால் தெரிந்து கொள்ளலாம். பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் இவ்வியாதி காணப்படாமலே இருந்தது. கிறிஸ்துவசகம் இரண்டாவது நூற் றாண்டிலும் ஆறாவது நூற்றாண்டிலும் இவ்வியாதி ஐரோப்பாவில் பரவியதாகத் தெரிகிறது. காலக்கிரமத்தில் அங்கிருந்து இந்தியா விலும் பரவிற்று தற்பொழுது இந்தியாவில் நிலைத்துவிட்டதென்றே சொல்லலாம். அநேகமாகச் சீதகாலத்தில் விருத்தியாவதும் உஷ்ண காலத்தில் கணிவதும் இதன் இயல்பு. பொதுவாக நோயாளி உடுத் திய வஸ்திரம் முதலியவைகளின் சம்பந்தம் முதலியவைகளால் இவ்வியாதி பரவுகிறது. ஒரே வீட்டில் மேல்மாடியில் இருப்பவர் களுக்கு இவ்வியாதி அதிகம்பரவுகிறதில்லை. கீழ்த்தரையில் வசிப்ப வர்களுக்குப் பெரும்பாலும் காணுகிறது. ஆகையால் ருதுவித்யா சத்தால் பூமியின் மட்டத்தில் உண்டாகும் விஷககாற்றும் இவ்வியா தியின் விருத்திக்கு காரணமெனக்கருத வேண்டியிருக்கிறது. பிரதி தினம் வீடு மெழுகிச்சுத்தம் செய்துசுண்ணாம்பு அடித்துவந்தாலும் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு அதிகம் பரவுவதில்லை. மற்றொரு விசேஷம் என்னவெனில் மரம் செடி கொடி முதலியன அடர்ந்து இருக்கும் இடங்களில் இவ்வியாதி கொஞ்சமும் அணுகுவதில்லை. இதுபோன்ற தன்மைகளை விரும்பியே நமது முன்னோர்கள் காடு களை மிகவும் விரும்பினார்கள். இவ்வியாதி பரவிய இடங்களில் அதிக மழை பெய்தால் இதன் வேகம் குறைகிறது. காலரா ஜலத் தாலும், மலேரியா கொசுக்களாலும், பிளேக் எலிகளாலும், ஏற்படுவ தாகக்கருதி தற்காலம் எலிகள் வேட்டையாடப்படுகின்றன. வியாதி

யின் விஷம் சரீரத்தில் வியாபிக்கும் அளவின் தாரதம்யத்தால் இதில் பல பேதம் உண்டாகின்றது. கட்டியுடன் வருவது ஒருவிதம் தொடைச்சந்துகளில் அல்லது கக்ஷங்களில் கட்டிகாணும். சிலருக்குக் கழுத்திலும் காணும். எலுமிச்சம்பழ அளவும் அதற்கு சிறிது பெரிதாகவும் கட்டிகள் இருக்கும். கட்டிகாணும் இடத்தில் அதிக வலி உண்டாகும், கட்டிகள் அமுக்குவதும் உண்டு. அல்லது பழுத்துச் சீழ்பிடித்து நோயாளி சௌக்யமானபிறகு பலமாதங்கள் கட்டிகள் ஆறாமல் நீடிப்பதும் உண்டு 3, 6, 7, 15 நாட்களில் மரணம் ஏற்படலாம் அல்லது குணமாகும். மூக்கு நுரையீரல்கள் இரைப்பை குடல் முதலியதிலிருந்து ரக்தப்பெருக்கு காணும் இது சிறிது லேசானது. கட்டிகள் காணாமல் நுரையீரல்கள்பாதிக்கப்படும் முந்தியவகை போலவே ஆரம்பிக்கும். ஆரம்பதினத்தில் அல்லது மறுநாள் நுரையீரல்கள் பாதிக்கப்படுகின்றன. சுவாசம் காணும், ரக்தம்கலந்த கபம் விழும். பிதற்றல் அல்லது புலப்பம் அதிகரிக்கும், தூக்கம் வராது, கஷ்ட சுவாசம் அதிகரித்து 3, 4 நாள்களில் மரணம் நேரிடும், இது முன்சொன்னதைவிடக் கொடியது, இதைவிடக்கொடியது வேறு ஒன்று உண்டு, வியாதியின் விஷம் கடினமாகவும் வேகமாகவும் தாக்கவதில் கட்டி முதலியது காணாமல் சிலமணி நேரத்திலேயே மரணம் ஏற்படும், மற்றொருவகை அதிகம் ஜுரம் இல்லாமலும அதிக கட்டிகள் இல்லாமலும்நோயாளி தன் காரியங்களைக் கவனித்துக்கொண்டே இருந்துசிறிதுநாட்களில் வியாதி விலகி சுகம்ஏற்படும், இதில் மரணம் நேருவதில்லை, முதல் வகையில் கட்டி சீழ்பிடித்து உடைந்துவிட்டால் மரணம் ஏற்படுவதில்லை, பொதுவாக அதிகம் ஜுரம் இல்லாமலும் நினைவு தவறாமலும் இருந்தால் நல்ல குறியாகும், நினைவு தவறி தீவிரஜுரம் காணுவது கெட்டகுறியாகும், இவ்வியாதி ஆரம்பிப்பதற்கு முன் அதிகச் சோம்பல், சரீரத்தளர்ச்சி, நடுக்கம், வாந்தி,கண்சிகப்பு,முதலியன உண்டாகும் சுறுசுறுப்பில்லாமல் சோர்வு ஏற்படும். பிறகு 104, 105, 107 டிக்ரிவரை ஜுரம் அடிக்கும், சரீரத்தில் சிகப்புத் தடிப்புகள் காணும், அதிசாரம், மூக்கில் ரக்தம் வடிதல், குடலிலிருந்து ரக்தம் வடிதல், புலப்பம், இவைகாணும், இவை மரணக் குறிகள், மிகவும் ஆராட்டம், உடம்புவலி, உண்டாகும், சில சமயம்

இவ்வியாதி முன்சொன்ன முற்குறி இல்லாமலே திடீரென்று ஆரம்பிப்பதும் உண்டு, தலைவலி, அதிகம் குளிர் இவைவரும் தாபஜ்வரம் அடித்து இரண்டாவது நாள் சிறிது தணியும், ஜாடைகாட்டிமறுபடியும் அதிகரிக்கும், குழந்தைகளுக்கு வலிப்புகாணும், ஹிருதயத்தின் வலதுபாகம் விரியும், உதடுகள் உலர்ந்துபோகும், பற்களின் மேற்பாகத்தில் ரத்தக்கட்டிகள் உண்டாகும், நடை தடுமாறும், காது மந்திக்கும், பேச்சு வியக்தமில்லாமல் இருக்கும், நாக்கு தடிக்கும், சரீரத்தின்மேல் தோலை ஒட்டி உள்புறம் ரக்தப்பெருக்கு உண்டாகும், இன்னும் சன்னிபாத சுரங்களுடைய சேஷ்டை எல்லாம் காணும். புத்தி வேலைக்கும் சரீரவேலைக்கும் பல மாதங்கள் வரை லாயக்கில்லாமல்போகும், இவ்வியாதி ஒரு முறைவந்தவர்களுக்கு அனேகமாக மறுபடியும் வருவதில்லை, வட இந்தியாவில் பல இடங்களைச்சூரையாடியபோதிலும், கங்கைக்கரைகளில் அதிகம் இல்லையென சொல்லப்படுகிறது, பம்பாயைச்சுற்றி இதன் வேகம் அதிகம் ஒருகாலம் கசிவுள்ள நதியோரங்களில் அதிகம் வியாபிப்பதாக நினைக்கப்பட்டது, ஆனால் இப்பொழுது ஜலசம்பந்தமே யில்லாத மேட்டுப்பிரதேசங்களிலும் குறைவின்றி விளையாடுகிறது, மிகவும் சுகாதார வசதியுள்ள இடங்களிலும் இதன் செல்வாக்குக் குறையக்காணோம். பிளேக் பூச்சிகள் சரீரத்தில் உள்ள காயங்கள் வெடிப்புக்கள் வழியாக ரக்தத்தில் கலந்துவிடுவதால் கட்டியுள்ள பிளேக் வருவதாக கருதப்படுகிறது, ஆனால் சுவாசாசயத்தை பாதிக்கும் வகையில் அப்பூச்சிகள் எவ்விதம் சுவாசாசயம் அல்லது நுரையீரல்களை அடைகின்றன என்று தெரியவில்லை, ஆனாலும் இவ்வகையிலும் ரக்தத்தில் பூச்சிகள் காணப்படுவதால் ஏதோ ஒரு வழியாகச் சென்றிருக்கக்கூடுமென்று நம்பப்படுகிறது.

சிகிச்சை—உலகத்தில் எந்த வியாதியும் எவ்வளவு உக்ரத்துடன் கொள்ளை நோயாகப் பரவியபோதிலும் மனிதன் சரீரம் அதை ஏற்கத்தயாராக இல்லாதவரை அவ்வியாதி அவனைப்பாதிப்பதில்லை, ஒரே வீட்டில் பலர் இந்நோய்க்கு இரையானபோதிலும் அவர்களிடம் கலந்திருக்கும் சிலர் இதற்கு இரையாகாமல் இருப்பதே இதற்குப்போதிய அத்தாக்ஷியாகும் சிலர் சரீர அமைப்பே

வியாதியை எதிர்க்கப்போதிய சக்தி உள்ளதாக இருக்கிறது, சிலருக்கு இயற்கையில் அவ்விதபலம் இல்லாவிட்டாலும் உட்கொள்ளும் உணவு முதலியதால் அவ்வித சக்தியைப் பெறுவது சுலபம். சரீர அமைப்புக்கு அவ்வித சக்தி இருக்கிறதா? இல்லையா? என்று நாம் தெரிந்துகொள்ளுவது அசாத்தியமானதால் எல்லாரும் அச்சக்தியை சம்பாதித்துக்கொள்ள ஆயுர்வேத உபதேசங்களில் மிகவும் ஆதரவுசெலுத்தவேண்டும், இந்நோயில் (பொதுவாக எல்லா நோயில்) சிகித்சையை இரண்டுவிதமாகப் பிரிக்கவேண்டும், வியாதி வராமலிருப்பது முக்கியமானது, இதற்காகத்தான் ஆயுர்வேதம் தர்மசாஸ்திரம் முதலியன மிகவும் வாத்ஸல்யத்துடன் சில நியாயங்களை உபதேசிக்கின்றன, வந்தபிறகு பரிஹாரம் செய்வது, இரண்டாவது, ஆகையால் நமது உணவில் முக்கியமான வஸ்துக்களுக்கு அச்சக்தியை விருத்திசெய்யப் போதிய குணமிருக்கிறதா என்பதை ஆராய்ந்தே நாம் உட்கொள்ளவேண்டும், ஊரில் வியாதியின் குறிகள் தட்டுப்படுமாகில் உடன் பேதிக்கு வாங்கிக்கொள்ளவேண்டும், ஏன் எனில் பழைய மலங்கள் சேருவதால் சரீரத்துக்குள்ளேயே விஷக்காற்று ஆரம்பித்து சரீரத்தின் சக்திகளையே கெடுக்கின்றது, ஆகையால் நான்கு நாட்களுக்கு ஒருதடவை பேதிக்கு எடுத்துக்கொள்ளவேண்டும், விளக்கெண்ணெய், சிவதை, முதலியன உயர்ந்த வஸ்துக்கள், சுத்தமான குளிர்ந்த அல்லது சூடான ஜலத்தில் பிரதிதினம் ஸ்நாநம் செய்யவேண்டும், ஸ்நாநம் செய்வதால் சரீரத்தில் உள்ள வியர்வைத்துவாரங்கள் சுத்தப்பட்டு ரக்தத்திலுள்ள விஷாம்சம் வியர்வை ரூபமாக வெளிவர ஹேதுவாகும், ஆகாரம் லகுவாகவும் அதியாகாமலும் உட்கொள்ளவேண்டும், தேங்காய் எண்ணெய் முதலியன அதிகம் கூடாது அவை குடலில் சென்றவுடன் அழுக ஆரம்பித்து ரக்தத்தில் சேருவதால் ரக்தம் கெடக்கூடும், சுத்தமான நெய்க்கு இந்த தோஷம் கிடையாது, ஆகையால் நெய்யை மிதமாக உபயோகிக்கலாம், கீரை வர்க்கங்கள் கொஞ்சமும் கூடாது, அவைகளும் குடலில் அழுகிப்போகும் சுபாவம் உள்ளவைகள் காய்கறிகளை மிதமாக உபயோகிக்கவேண்டும் முருங்கை, பாகல், கத்தரி, சேனை, கருணை, முள்ளங்கி, முதலியன நல்லவை, இவைகளையும் நன்றாகவேக வைத்தே உபயோகிக்கவேண்டும், அரிசி,

துவரை, கோதுமை, இவை முக்கியமாக உபயோகிக்கலாம், நான்கு நாள்களுக்கு ஒருதடவை சரீரத்தில் வியர்வை பிறக்கும்படி ஸ்வேதம் செய்துகொள்ளவேண்டும், இதனால் சரீரத்திலுள்ள விஷாம்சம் வியர்வைமூலம் கழிய சௌகரியம் ஏற்படும், வசதியுள்ளவர்கள் கூடியவரையிலும் மாடியிலேயே பழகுவது நல்லது, முழங்காலிலிருந்து பாதம்வரை கம்பளி அல்லது வஸ்திரத்தால் சுற்றிக்கொள்ளவேண்டும், அடியில்கண்ட மருந்தைப் பிரதிதினம் உபயோகிக்கவேண்டும், நாட்பட்ட வேம்பின் பட்டை பலம் 2, நிலவேம்பு பலம் 1, பேப்புடல் பலம் 1, கோரைக்கிழங்கு பலம் 1, சிறுகாஞ்சொறி வேர். பலம் 1, ஆடாதோடை பலம் $2\frac{1}{2}$, விஷ்ணுக்கிராந்தி பலம் 1, பர்ப்பாடகம் பலம் 1, சீந்திற்கொடி பலம் 1, அதிமதுரம் பலம் 1, திப்பிலி பலம் $2\frac{1}{2}$, ஓமம் பலம் $2\frac{1}{2}$, குருந்தொட்டி பலம் $2\frac{1}{2}$ பேய்ப்பீர்க்கு பலம் 1 வசம்பு பலம் $\frac{1}{2}$, சரக்கொன்றைப் புளி பலம் 5, கடுகுரோகிணி பலம் 1, இவைகளை இடித்துப்பானையில் போட்டு விதிப்படி ஜலம்விட்டுக் கஷாயம் வைத்து தினம் அரைமுதல் ஒரு அவுன்சுவரையிலும் மூன்றுவேளை உபயோகிக்கவும், இது இவ் வியாதிக்கு விலக்குமருந்து, வியாதி வந்தபிறகும் உபயோகிக்கலாம் வியாதிவந்தபிறகு செய்யும் சிகிச்சையைக் கீழ்கண்டபடி செய்ய வேண்டும், கூடியமட்டில் நோயாளியிடம் யாரும் போகக்கூடாது, நோயாளியைக் கவனிக்கத்தகுந்த பரிசாரகன் இருக்கவேண்டும், காய்ச்சல் ஆரம்பிக்கும் அறிகுறி கண்டாலும் அல்லது ஆரம்பித்த உடனும் 2 தடவை மலம் போகும்படி மருந்து கொடுக்கவேண்டும், கட்டி காணும் வியாதியிலும் அது இல்லாத வியாதியிலும் சிகிச்சை ஒரு மாதிரியே, கட்டிகண்டால் கூடியவரையில அது அமுங்கிவிட முயற்சிக்கலாம், தாமரை ஓடைகளில் அடியில் இருக்கும் ஈரமான களிமண்ணைக் கொண்டுவந்து தடிப்பாகக் கட்டி காணும் இடத்தில் போடவேண்டும், கருநெய்தல்கிழங்கு, தாமரைக்கிழங்கு. அல்லது கண்டு, ஆம்பல்கிழங்கு, இவைகளில் ஏதாவது ஒன்றை அரைத்துத் தடிப்பாகக்கட்டியில் பூசலாம், பசலைக்கீரை டல்வது பிரம்மி இவைகளையும் உபயோகிககலாம். காய்ச்சல் தணிவதால் சுவாசாசயம் முதலியதில் அதிக தாபம் இல்லாமல் போகிறது, வியாதியின் விஷம் தணிந்தால் தான் காய்ச்சல் தணியும், ஆகையால் வியாதியின்

விஷவேகம் இறங்கவே முக்கியமாக முயற்சிக்கவேண்டும், முன்சொல்லிய கஷாயத்தில் இரண்டு அல்லது மூன்று குன்றுமணி இடை சுத்தமான கல்மதம் சேர்த்துத் தினம் பலதடவையாகக் கொடுக்கவேண்டும், இதனால் மூத்திரம் அதிகம் போகும், அதுவழியாக வியாதியின் விஷாம்சமும் வெளியேறும், ஜுரம் அதிகம்இருக்கும்பொழுது முன்சொன்ன கஷாயத்தில் வெள்ளைத்துணியை ஏழு மடிப்பாக மடித்து நனைத்து நாபியில் போடவும், மெல்லிய வெள்ளைத்துணியை முலைப்பாலில் நனைத்து நெற்றியில் போட்டுத்துணி உலராமல் முலைப்பால் விட்டுவரவும், இவ்விதம் காய்ச்சலில் வேகம் தணியும்வரை செய்யவேண்டும், சுத்தமான (அக்னிக்கு ஜயித்த) வெள்ளைப்பாஷாண பஸ்மம் இவ்வியாதியில் மிகச்சிறந்தது, கட்டிகளுக்கு "சததௌத கிருதம்" அல்லது "ஸஹஸ்ர தௌதகிருதம்,' மேலுக்குத் தடவவேண்டும், துணியில்நனைத்தும் அல்லது தனியாகவும் உபயோகிக்கலாம், சுத்தமான அட்டைகளைக் கட்டிகளில் விட்டு ரக்தம் குடிக்கவைக்கவும். புதிய அட்டைகள் சிலசமயம்ரக்தம்குடிப்பதில்லை, அதற்காகச் சுத்தஜலத்தில் ஒருநாள் போட்டு வைத்தால் பிறகு நல்லபசி உண்டாய் ரக்தம் குடிக்கும் ரக்தம் குடித்த இடத்தில் கசிவு நிற்காவிடில் ஈரத்துணியைப் போடவும் படிககாரம்பொடி செய்து வைக்கலாம், ரக்தம் நின்றுவிடும், சுபம்.

## ஜானபதிகமாக ஓர் க்ஷுத்ர ரோகம்.

(திருச்சி, வைத்ய வாசஸ்பதி, V. B. நடராஜ சாஸ்திரிகள்)

விஷூசி, மஸூரிகா, ஆக்நிரோஹிணி அல்லது கிரந்திகஜ்வரம் (Plague) இதுபோன்ற க்ரூரமான மஹா வியாதிகள் அடிக்கடி ஜனபதோத்ஸம்ஸனரூபமாக ஏற்படுவதைப் பார்க்கிறோம். சில ருதுக்களில் சில ஜ்வர விசேஷங்களும், சில ருதுக்களில் ஸாங்கிராமிக ரூபமாக கபப்பிரவாஹிகா, ரக்தப்பிரவாஹிகா, ரோகங்களும் ஏற்படுவதையும் நாம் அடிக்கடி பார்க்கிறோம். பல வருஷங்களுக்கு ஒருதரமாக சக்ர பரிவர்தன ரீதிபோல் ஜானபதிகமாக வியாதி ஏற்பட்டு வந்திருந்ததாக வைத்திய இதிஹாஸமும் தெரிவிக்கிறது. Influenza எனப்படும் கப ஸந்நிபாத ஜ்வரமானது இவ்விதம் 2, 3 தரம் ஸம்பவித்ததாக சரித்திரம் சொல்லுகிறது. மஹா யுத்தங்கள் ஏற்பட்ட ஸமயங்களில் சிற்சில நோய்கள் ஜானபதிகமாக ஏற்படுகின்றன. துர்பிக்ஷ காலங்களில் சில விசேஷ தொத்துவியாதிகள் ஸம்பவிக்கின்றன. மேலே சொன்னவை எல்லாம் பூத வர்த்தமான காலங்களில் நாம் கேட்டும் பார்த்துமிருக்கிறோம். ஜானபதிகமாக ஏற்படும் வியாதிகள் அநேகமாய் எல்லாமே மிகக்க்ரூரமானவை. ஆரம்ப வேகாவஸ்தையில் விசேஷமாக உயிர் கொள்ளையாடி, கிரமமாகக் குறைந்த வேகமாகி, சமனமடைந்து விடுகின்றன. இப்போது சுமார் ஒரு வருஷ காலமாக ஒரு த்வக்ரோகம் ஜான பதிகமாக ஏற்பட்டுவருகிறது. இது சொரிசிரங்கு சிறிய கொப்பளங்களுடன் ஏற்படுகிறது. சாஸ்திரங்களில "பாமா" என்று சொல்லப்படும் ரோகலக்ஷணங்களுடன் ஸமான லக்ஷணமுள்ளவைகளாக இந்த ரோகத்தைச் சொல்லலாம். நம்முடைய அனுபவத்தில் திருச்சி, தஞ்சை, சேலம், தென் ஆற்காடு ஜில்லாக்களில், நகரங்களிலும் கிராமங்களிலும், வயோபேதமின்றி அநேகர்களிடத்தில் பரவிக் கொண்டிருந்துவருகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வந்தால் அக்குடும்பத்திய ஜனங்கள் யாவருக்கும் இந்தப் பீடை ஏற்படுவதாலும், பள்ளிக்கூடங்களில் அநேகர் மாணவ மாணவிகளுக்குத் தொ-ருவதாலும் இது ஸாங்கிராமிகம் என்பதில் ஸந்தேஹத்திற்கு இட

Registered No. M. 4018.

யில்லை. இந்த த்வக்ரோகமானது புதிதல்ல, என்றைக்குமுள்ளதே. ஆயினும் சென்ற சுமார் ஒரு வருஷகாலம்துடங்கி நாளுக்குநாள் வேகமாகப் பரவி விருத்தியடைந்து இப்போது அநேகம் பெயர்கள் பல பல ஊர்களில் இந்த வியாதியினால் வருந்துகிறார்கள். இப்போது இந்த த்வக்ரோகம் இருப்பதுபோல் இவ்வளவு அதிகமாக இந்நாட்டில் முன்பு இருந்ததில்லை யென்று நம்முடைய அநுபவ மட்டுமல்ல, மற்ற வைத்திய நண்பர்களிடமிருந்தும் விசாரித்ததிலிருந்து இந்த த்வக்ரோகம் இன்று மிகவும் அதிகமா யிருக்கிறதென்றே அபிப்பிராயம் கிடைக்கிறது. ஆதலால் இந்த சொறி சிரங்கு வியாதியானது தற்சமயம் ஜானபதிகமாகக் கருதப்படவேண்டும். ஆயினும் வியாதி ஸ்வரூபத்திலிருந்து க்ஷுத்ர ரோக கோஷ்டியில் சேர்க்கப்படலாம். நிபந்த கர்த்தாவின் அநுபவத்தில் இந்த வர்ணிக்கப்பட்ட சொறிசிரங்கானது ஸுஸாத்தியமாயில்லை. கிருச்சிரஸாத்திய கோடியிலேயே சேர்க்கத்தக்கதாயிருக்கிறது, ஆனால், யாப்ய கோடியிலோ அஸாத்தியத்திலோ சேர்க்கும்படி ஒரு வியக்தியிலுமாகவில்லை. முன்பு ஸுகஸாத்தியமாய் இருந்துவந்த இந்த சொறிசிரங்கு நோயானது, இப்போது கிருச்சிர ஸாத்தியமாயும் தீர்க்ககாலாநுபந்தியாயும், ஜானபதிகமாயும், பரிணமித்துப் பரவியிருக்கிறதிற்குக் காரணம் என்ன? காரணம் கண்டுபிடிப்பது மிக சிரமமா யிருக்கிறது. விசேஷமாய் ருதுவிபர்யாசங்கள் காணப்படவில்லை. அரிசி சுத்தமானது கிடைக்காததினால என்று ஸந்தேஹிக்க இடமில்லை. அரிசிப்பஞ்சம் ஏற்படாத திருச்சி தஞ்சை ஜில்லாக்களில் இந்த வியாதி மிகுந்திருக்கிறது, ஆதலால் வைத்திய ஸஹோதரர் ஒவ்வொருவரையும் பிரார்த்திப்பதாவது:—தங்கள் தங்களுடைய இடங்களில் இந்த சொறிசிரங்கு இப்போது அதிகமாயிருக்கிறதா? ஸ்வாநுபவம் சிகிச்சையிலும் நிதானத்திலும் என்ன? இப்போது இது ஜானபதிகமாய்ப் பரவுவதற்கு விசிஷ்டமான திருஷ்ட காரணங்கட் யாவை? என்ற முதலிய ஸந்தேஹங்களை சந்திரிகைமூலம் பிரகாசஞ் செய்யப் பிரார்த்தனை செய்கிறேன்.

வே வியாதியை யுண்டுபண்ணும் நிலைமை பிரசமம் என்பது தணிதல் ஆகும்) ஆவணி புரட்டாசி மாதங்களில் பித்தமானது "சயம்" என்ற நிலைமையையும், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பிரகோபம் என்ற நிலைமையையும் மார்கழி தை மாதங்களில் "பிரசமம்" என்ற நிலைமையையும் அடையும் மாசி பங்குனி மாதங்களில் கபமானது "சயம்" என்ற நிலைமையும், சித்திரை வைகாசி மாதங்களில் "பிரகோபம்" என்ற நிலைமையையும் ஆனி ஆடி மாதங்களில் "பிரசமம்" என்ற நிலைமையும் அடையும் காலத்தை யொட்டித் திரிதோஷங்களின் மூன்று நிலைமைகளைச்சொன்னோம். ஆனல் ஆஹார விஹாரங்களையொட்டி வேறு காலங்களிலும் திரிதோஷங்கள் முன் சொன்ன நிலைமைகளை அடையலாம். திரிதோஷங்கள் சமான குணங்களான ஆஹார விஹாரங்களால் முன் சொன்ன விகார நிலைமைகளையும், விபரீத குணமுள்ள ஆஹார விஹாரங்களால் சமனத்தையும் அடைகின்றன, திரிதோஷங்கள் தங்களுக்கு இயற்கையாக ஏற்பட்டுள்ள ஸ்தானத்தில் இருந்துகொண்டே விருத்தியடைவது "சயம்" எனப்படும், இதற்குக் குறிகளாவன—வயிறு கலகலப்பாக இல்லாமல் விரைத்துப்போதல், சரீரத்தில் மஞ்சள் நிறத்தோற்றம், அக்னிபலக்குறைவு சரீரம் கனத்தல், சோம்பல், அந்தந்த தோஷம் சயநிலைமையடைவதற்குக் காரணமானவைகளில் வெறுப்பு, ஆகிய இவையாகும், திரிதோஷங்களின் சய நிலைமைகளிலேயே தகுந்த பரிஹாரம் செய்து விட்டால் சய நிலைமைகளுக்குப்பிறகு ஏற்படும் நிலைமைகள் (பிரகோபம் முதலியவை) வாாமல் தடுக்கலாம், பிரகோப நிலைமை கடினமானதாகும், இனி ஆவணி புரட்டாசி மாதங்களில் வாழ்க்கை விதிகளைச்சொல்லுகிறோம்—இந்த மாதங்களில் வாயு இயற்கையாகக் கால சுபாவத்தை யொட்டி மிகவும் பலத்தைப் படைகிறது. ஆகையால் மதுரம், புளிப்பு, உப்பு ஆக இந்த மூன்று ரஸமுள்ள ஆகாரங்களை விசேஷித்து உபயோகிக்கவேண்டும். இந்த உபயோகத்தால் வாயுதணியும், முன்சொன்ன மாதங்களில் சரீரம் கைந்துபோகிறது. அதை விலக்க காரம், துவர்ப்பு, தித்திப்பு, இவைகளையும் உபயோகிக்கவேண்டும். (குறிப்பு:—ஆறு ரசங்களில் கசப்பு ரஸம் ஒன்று மாத்திரம் இம்மாதங்களில் தள்ளுபடி செய்யவேண்டுமென்பது பொருள்) ஸ்வேதனம், மர்தனம், (ஸ்வேதனம் என்பது முறைப்படி

வியாவை பிடித்தல், மர்தனம் என்பது சரீரத்தைப் பிடித்துவிடல் இதை ஆங்கிலத்தில் Massage என்பர். தயிர், உஷ்ணம், (அதாவது சூட்டுடன் சாப்பிடவேண்டுமென்பது பொருள்) மேட்டு பூமிகளில் வசிக்கும் ஜந்துக்களின் மாமிசம், கோதுமை, நெல், உளுந்து, கிணற்றுநீர், ஆகாச நீர் அதாவது முறைப்படி சேகரித்த மழைஜலம் ஆகிய இவை நல்லது. கீழ்காற்று, மழை, வெய்யில், குளிர், சரீர ஆயாசம், ஆற்று நீர், பகல் தூக்கம், பசையற்ற ஆகாரம், பிரதிதினம் ஸ்திரீகளின் சேர்க்கை, ஆகிய இவைகளை விலக்கவேண்டும், இனி ஐப்புசி, கார்த்திகை மாதங்களின் விதி சொல்லப்படுகிறது—நெய், தித்திப்பு, துவர்ப்பு, கசப்பு, இந்த ரஸங்கள், குளிர்ந்த வஸ்துக்கள், இலகுவான ஆகாரம், பால், ஜீனியால் தயாரிக்கப்பட்ட வஸ்துக்கள்; அல்பமானகாரம், மேட்டு பூமியில் இருக்கும் ஜந்துக்களின் மாமிசம், கோதுமை, யவதானியம், பாசிப் பயறு, நெய், நதிஜலம், மழை ஜலம், நிலா, சந்தனப்பூச்சு, பச்சைக் கர்பூரப்பூச்சு முதலியன, மாலை, வெளுப்பு வேஷ்டி, நண்பர்கள் கோஷ்டி, இனிமையான பேச்சுகள், நீர் விளையாட்டு, பேதிக்குச் சாப்பிடல், ரக்தம வெளியேற்றுதல், (குறிப்பு— "விராவேதம்" என ஓர் முறை நூல்களில் சொல்லப்படுகிறது பஞ்சகர்மக்கள் என்ற ஐந்துவகை சோதனங்களில் இது ஒன்றாகும், சிலவியாதிகளில் சரீரத்திலிருந்து ரக்தத்தை ஓர் அளவுக்கு வெளியேற்றுதல், அதாவது ரக்தக்குழாயை ஊசியால் குத்தி குழாய்வைத்து வெளிப்படுத்துதல், இம்முறை வியாதிகளுக்கு மாத்திரமின்றி ருதுக்களிலும் செய்யவேண்டிதாகக் கூறப்படுகின்றது, இமமுறை வெகுகாலத்திற்கு முந்தியே நூல்களில் விலக்கப்பட்டு இதற்குப் பதிலாக இதன் ஸ்தானத்தில் "அனுவாஸநம்" பஸ்தி முறை சேர்க்கப்பட்டு பஞ்சகர்மாக்கள் என தத்காலம் கூறப்படுகிறது. இந்த "விராவியதம்" என்ற முறை வெதுகாலத்திற்குமுன் ஐரோப்பியர்களாலும் கையாளப்பட்டதாகத் தெரிகிறது.) ஆகிய இவை நல்லது, தயிர், சரீரப்பயிற்சி, புளிப்பு, காரம், உஷ்ண வஸ்துக்கள், தீக்ஷண வஸ்துக்கள் அதாவது மிளகுபோன்றுள்ளவைகள், பகல் தூக்கம், குளிர்ச்சி, வெய்யில், இவைகளை விலக்கவேண்டும், பகலில் வெய்யில் அடித்தும் இரவில் நிலா விழுந்தும் இருக்கும் நீர் நிலைகளிலுள்ள

நீரும் இதற்கு ("அம்ருதகம்" எனப்பெயர்.) கரும்பு, சம்பா நெல், பாசிப்பருப்பு, குளத்துநீர், காய்ச்சினபால், சாயங்காலத்தில் நிலா, ஆகிய இவை நல்லது, இனி மார்கழி தைமாதங்களின் விதி சொல்லப்படுகிறது—காலை நேரத்தில் ஆகாரம், புளிப்பு, உப்பு, மாவுபண்டங்கள், எண்ணை ஸ்நாநம், வெய்யில் காய்தல், சரீரப்பயிற்சி, கோதுமை, வெல்லம், சம்பாநெல், உளுந்து, மாமிசம், சுடுசோறு, எள்ளு, கஸ்தூரி, குங்குமப்பூ, அகரு, (இவைகள் சந்தனப்பூச்சில் சேரும் வஸ்துக்கள்) கைகால்கழுவ சுடுநீர், பசையுள்ள ஆகாரம், ஸ்திரீகளின் சேர்க்கை, பருமனான வஸ்திரம், ஆகிய இவை நல்லது, இனி மாசி பங்குனி மாதங்களின் விதி சொல்லப்படுகிறது—இக்காலங்களில் குளிர் அதிகம், கால இயற்கையை ஒட்டி சரீரம் முதலியவைகளில் எண்ணைப்பசையும் குறைந்துவிடுகிறது, ஆகவே மார்கழி தை மாதங்களில் சொன்ன விதிகளை விசேஷித்து இம்மாதங்களில் அனுஷ்டிக்கவேண்டும், இனி சித்திரை வைகாசி மாதங்களின் விதி சொல்லப்படுகிறது—வாந்திசெய்துவைக்கவேண்டும், நஸ்யம் செய்யவும், தேனுடன் கடுக்காய் பொடியை உபயோகிக்கவும், சரீரப் பயிற்சி, சரீரப்பூச்சு, கபஹரமான வாய்கொப்பளித்தல், மேட்டுநிலத்து மாமிசம், கோதுமை, பலவிதமான நெல், பாசிப்பயறு, யவம் 60 நாட்களில் விளையும் நெல், சந்தனம், குங்குமப்பூ, அகரு இவைகளை சரீரத்தில் பூசிக்கொள்ளுதல், பசையற்றதும், காரமாகவும், உஷ்ணமாகவும், இலகுவாகவுமுள்ள ஆகாரம் இவைகளை உபயோகிக்கவேண்டும். தயிர், பகல் தூக்கம், ஜீர்ணமாகாத ஆகாரம், பனி, இவைகளை விலக்கவேண்டும், இனி ஆனி ஆடி மாதங்களின் விதி சொல்லப்படுகின்றது—மதுராஸம், பசையுள்ளதும், குளிர்ச்சியானதும், இலகுவர்கவும், திரவரூபமாகவும், இருக்கும் ஆகாரம் நல்லது, ரஸாலா (குறிப்பு—ரஸாலா என்பது தயிரில் செய்யும் ஓர் பக்வமுறை அதாவது—நன்றாகப்புளித்த தயிரை ஓர் துணியில் கட்டித் தொங்கவிட்டால் சில நாழிகைகளில் தயிரில் இருக்கும் நீர் முழுவதும் வடிந்து தயிர் கட்டியாகஆகிவிடும். அந்தத்தயிர் சின்னப் படி இரண்டு, சீனி கல்கண்டு தோலா 64, நெய், தேன், வகைக்குத் தோலா நான்கு, மிளகு, சுக்கு, வகைக்குத்தோலா இரண்டு, சன்ன லவங்கப்பட்டை, பச்சிலை, ஏலம், நாககப்பூ, வகைக்குத்தோலா

அரை, இவற்றுள் தயிர், நெய், தேன், நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து பிறகு அத்தப்பொடியை தயிர் நெய் தேன் இவைகளுடன் சேர்த்து நன்றாகக்கலந்து பிறகு வாசனைக்குக்கொஞ்சம் பச்சைக்கர்ப்பூரம் சேர்த்து இந்த வஸ்துவை ரஸாலா என்று அழைக்கின்றனர், இது பீமசேனனால் தயாரிக்கப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்டதாக நூல்கள் கூறுகின்றன, இது சாப்பிடக்கூடிய ஓர் பக்ஷணம்) சர்க்கரை, ஸத்துமாவு, பால், தாம்பூலம் (இதன் பொருள் விளங்கவில்லை) சம்பாநெல், மாமிசரஸம், நிலா, பகல் தூக்கம், சந்தனம். பானகம், பால், இவைகளை உபயோகிக்கவும், காரம், உப்பு, புளிப்பு, வெய்யில், சிரமம், ஆகியஇவைகளை விலக்கவும், இவ்விதம் ருதுவிதிகளைச் சரிவர அனுஷ்டித்தால் ருது மாறுபாடுகளால் உண்டாகும் நோய்களுக்கு இலக்காகமாட்டான், பகலில் சூரியகிரணங்களாலும் இரவில் சந்திரகிரணங்களாலும் சம்பந்தப்பட்டும் அகஸ்திய நக்ஷத்திரத்தின் உதயத்தாலும் பரிசுத்தமாக இருக்கும் ஜலத்திற்கு "ஹம்ஸோதகம்" எனப்பெயர், அது திரிதோஷஹரம், இது கபம் செய்யாது, பசையுள்ளது, குடிநீர் முதலியவைகளில் உபயோகிக்க மிகவும் அர்ஹமானது, இனி திரவ திரவ்யங்கள் சொல்லப்படுகின்றன. நீரின் குணங்கள்:—குளிர்ச்சியானது, பசையற்றது, பித்தம்; விஷம், கிருகிருப்பு, இவைகளை நீக்கும், எரிச்சல், அஜீர்ணம், சிரமம், வாந்தி, மயக்கம், ஸ்மரணை யிழத்தல், மதாத்யயம் (அதிகக்குடியால் காணும் நோய்) ஆக இவைகளுக்கு நல்லது. மூர்ச்சை, பித்தம் உஷ்ணம், எரிச்சல், விஷம், ரக்தநோய், மதாத்யயம், தலைச்சுற்றல், ஆயாசம், அதிசாரம், வாந்தி, மேல்நோக்கின ரக்தபித்தம், ஆக இவைகளில் குளிர்ந்த நீர் நன்மைசெய்யும். சுடுநீர் குணங்கள்—நீரை அடுப்பில் கொதிக்கவைத்து நுரையடங்கி வேகமடங்கினால் அதாவது பாதி நீராக வற்றினால் அது பொதுவில் சுடுநீர் எனப்படும். இது கபம், மேதஸ், வாயு, ஆமம், இவைகளை நீக்கும், தீபனம், மூத்திரப்பையைச் சுத்திசெய்யும், காஸம், சுவாஸம், ஜ்வரம், இவைகளைப்போக்கும், எப்பொழுதும் பத்தியமாகும், [illegible] வற்றின சுடுநீர் [illegible], பாதியளவு வற்றிய சுடுநீர் வாதபித்தஹரம், [illegible] சுடுநீர் திரிதோஷஹரம்,

இரும்புகுண்டுகள் அல்லது மண்செங்கல் ஆகிய இவைகளைப்பழுக்கக்காய்ச்சிப் பச்சைத்தண்ணீரில் தோய்த்து உண்டாகும் சுடுநீர் எல்லா தோஷங்களையும் போக்கும், பத்தியம், ஆரோக்யத்தைக்காக்கும் சுக்குசேர்ந்த சுடுநீர்கபரோகங்களில் நன்மைசெய்யும், ஓமம் சேர்ந்த சுடுநீர் வாதரோகங்களுக்கு நல்லது, சுடுநீர் பித்தரோகங்களுக்குக் கூடாது, எல்லா வியாதிகளிலும் பச்சைநீர் கூடாது, ஐப்பசி கார்த்திகை மாதங்களில் $\frac{1}{8}$ வாசியும். மார்கழி தை மாதங்களில் கால்வாசியும், மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் பாதியளவும் வற்றவைத்துச் சுடுநீரை உபயோகிக்கவும். ருதுக்கள் மாறுபட்டாலும் அதாவது மழைகாலத்தில் வெய்யில், வெய்யில் காலத்தில் மழை, மழைகாலத்தில் பனி, பனிகாலத்தில் மழை என்று இவ்விதம் மாறுபட்டகாலங்களிலும், ஆவணி புரட்டாசி மாதங்களிலும் $\frac{1}{8}$ பங்காக வற்றவைத்த சுடுநீரை உபயோகிக்கவும். இரவில் சுடுநீர் சாப்பிட்டால் கபத்தைத் தணித்து வாயுவைக்கண்டிக்கும், அஜீர்ண ஆகாரத்தை ஜரிக்கச்செய்யும். பகலில்தயார்செய்த சுடுநீர் இரவிலும், இரவில் தயார்செய்த சுடுநீர் பகலிலும், குரு குணத்தை யடையும். விலாப்பக்க வலி, பீனசம், வாதரோகம், தொண்டை யடைப்பு, வயிற்றுப்பொருமல், வயிறு விரைத்திருந்தால் வாந்தி பேதிக்குச் சாப்பிட்டவர் புதிய காய்ச்சல், விக்கல், ஸ்நேஹபானம் அதாவது கிருதசேவை, ஆகிய இவைகளில் பச்சைநீர் கூடாது. அரோசகம், பீனசம், ஜலக்கானம், விக்கம், க்ஷயம், மந்தாக்னி, மஹோதரம், கோடம், ஜ்வரம், கண்ரோகம், விரணம், மதுமேஹம், இவைகளில் நீரைக்கொஞ்ச அளவில் குடிக்கவேண்டும், முன் சொன்னவிதமாகச் சுடுநீர் தயாரித்து ஆறவைத்த பிறகு அந்த நீரின் குணம்—குன்மம், மூலம், கிரஹணி, க்ஷயம், மஹோதரம், மந்தாக்னி, வயிற்றுப்பொருமல், வீக்கம், பாண்டு, தொண்டை ரோகம், விரணம், பிரமேஹம், கண்ரோகம், வாதரோகம், அரோசகம், அதிசாரம், கபரோகம், குஷ்டம், பீனசம், ஆக இந்ரோகங்களில் ஆறவைத்த சுடுநீரைக் கொஞ்ச அளவில் கொடுத்து வரவேண்டும். பச்சை நீரை உட்கொண்டால் அது ஜீர்ணமாக மூன்றுமணி செல்லும், ஆறவைத்த சுடுநீர் $1\frac{1}{2}$ மணியிலும், அல்பமூஷ்ண சுடுநீர் முக்கால் மணியிலும் ஜீர்ணமாகும். நீரை அதிகம்

குடிப்பதால் ஆமம் உண்டாகும், ஆமம் விருத்தியாவதால் அக்னி மந்தமும், அக்னிமந்தத்தால் அஜீர்ணமும், அஜீர்ணத்தால் ஜ்வரமும், ஜ்வரத்தால் தாது க்ஷயமும், தாது நாசத்தால் மேன்மேலும் பல ரோகங்களும் உண்டாகின்றன. நீரில் சர்க்கரை சேர்த்துச்சாப்பிட கபம், வாயு, விலகும், ஜீனி, கல்கண்டு சேர்த்துச்சாப்பிட—தேமல்கள் விலகும், சுக்ரவிருத்தி உண்டாகும், வெல்லம் சேர்த்துச்சாப்பிட நீர்ச்சுருக்கு போகும், ஆனால் கபபித்தங்கள் அதிகரிக்கும், இள நீர் குணம்—பசையுள்ளது, மதுரமானது, குளிர்ச்சியானது, ஹிருதயத்திற்கு நல்லது, தீபனம், மூத்திரப்பையைச் சுத்தி செய்யும், தாதுபுஷ்டி கொடுக்கும், பித்தம், தாகம், இவைகளை நீக்கும், இலகுவானது, இனி பாலின் குணங்கள் சொல்லப்படுகின்றன—அக்னி தீபனமுள்ளவன், மெலிந்தவன், பாலர், விருத்தர், ஸ்திரீ விருப்பமுள்ளவர், ஆகிய இவர்களுக்குப்பால் நல்லது. இது உட்கொண்டவுடன் சுக்ரத்தை அதிகப்படுத்தும், பழைய காய்ச்சல், நீர் சுருக்கு ரக்தபித்தம், மதாத்யயம், காஸம், சுவாஸம், ஆகிய இவைகளில்பால் நன்மைசெய்யும். பசுவின்பால்—மதுர ரஸம், குளிர்ச்சியானது, குரு, பசையுள்ளது, ரஸாயனம், புஷ்டியைக் கொடுக்கும், முலைப் பாலை அதிகப்படுத்தும், பலத்தைக்கொடுக்கும், ஜீவசக்தியை அளிக்கும், வாதபித்தங்களைப் போக்கும். பால் எட்டுவகை யாகும். அவை யாவன—பசு, எருமை, வெள்ளாடு, ஒட்டகை. ஸ்திரீகள், செம்மறி யாடு, யானை, ஒற்றைக்குளம்புள்ள பிராணிகள் என எட்டுவிதம். பசும்பால்—கருப்பு நிறமுள்ள பசுவின்பால் மிகவும் உயர்ந்தது, வாதம், பித்தம், கபம், இவைகளைப் போக்கும், மஞ்சள் நிறமான பசுவின்பால்—வாதபித்தஹரம், சிகப்புப்பசுவின்பால் மிகவும் வாத ஹரம், பலவர்ணங்கள் கலந்த பசுவின்பால்—மிகவும் வாதஹரம், வெளுப்புப்பசுவின்பால்—கபம்செய்யும், குருவானது, இளங்கன்று பசு அல்லது கன்று இழந்த பசு இவைகளின் பால்—திரிதோஷங் களைச்செய்யும், முற்றின கன்றுள்ள பசுவின்பால்-திரிதோஷஹரம், திருப்திகரம், பலத்தைக்கொடுக்கும், கடலைப்புண்ணாக்கு முதலிய புண்ணாக்குகளைத்தின்னும் பசுவின்பால்—குரு, கபம் செய்யும், தூக்கம், சுக்ரம், பலம், சரீரம் தொங்கி போடுதல், அக்னிமந்தம், ஆகிய இவைகளைச் செய்யும், குளிர்ச்சியானது, கருப்பு நிறமுள்ள

பசுவின்பால் நுரையும், வெள்ளாட்டின்பால் நுரையும்சாப்பிட்டால்
மிகுந்த நன்மைகொடுக்கும், மந்தாக்னிகள், மெலிந்தவர்கள், அதிசார
ரோகிகள்: ஆகிய இவர்களுக்கு விசேஷித்த நன்மைசெய்யும், மத்து
முதலிய சாதனங்களால் பச்சைப்பாலைச்சற்று கடைந்து உஷ்ண
மாகும்படி செய்து அந்தச்சூட்டுடன் அந்தப்பாலை உபயோகித்தால்
உடனே பலம்கொடுக்கும், மெலிந்தவர்களுக்கு நல்லது, ஜ்வரத்து
டன் கூடிய அதிசாரம், ஆமஜ்வரம், விஷமஜ்வரம், (அதாவது முறை
க்காய்ச்சல்) மந்தாக்னி, கபநோய், ஆகிய இவைகளில் பாலின் நுரை
நன்மை செய்யும். எருமைப்பால்—மதுர ரஸம், பசையுள்ளது,
குரு, பலத்தைக்கொடுக்கும், தூக்கம், சுக்ரம், இவைகளைச் செய்
யும், குளிர்ச்சியானது, கபம் செய்யும், அக்னிமந்தம் செய்யும்,
வெள்ளாட்டுப்பால்—பசுவின்பாலின் குணமுள்ளது, மலபந்தம்
செய்யும், மிகவும் தீபனம், இலகுவானது, க்ஷயம், மூலம், அதிசா
ரம், திரிதோஷ ரக்தபித்தம், தலைச்சுற்றல், ஜ்வரம், இவைகளுக்கு
நல்லது, சரீரம் சிறியதாக இருப்பதாலும், காரம் கசப்புள்ள தழை
களைத்தின்னுவதாலும், நீரை அதிகம் உட்கொள்ளாததாலும், அதி
கம் ஓடி அலைவதாலும், இது திரிதோஷஹரம். செம்மறி ஆட்டின்
பால்—மதுரம், கூந்தலுக்கு நல்லது, பசையுள்ளது, வாதகபங்களுக்
குநல்லது, குருவானது, வாயு மிகுந்த ரோகங்களிலும் தனித்த
வாயு ரோகங்களிலும் நன்மைசெய்யும். ஒட்டகைப்பால்—மதுரம்
பசையற்றது, உப்பு, இலகு, தீபனம், கிருமி, குஷ்டம், கபநோய்,
வயிற்றுப்பொருமல், வீக்கம், மகோதரம், ஆகிய இவைகளைப்போக்
கும். யானைப்பால்—ஜீர்ணமாவது கடினம், வாத கபங்களைச்செய்
யும், குருவானது, மதுரம், பித்தஹரம், பலத்தைக் கொடுக்கும்
குளிர்ச்சியானது, சிரமத்தைத் தணிக்கும், குதிரைப்பால்—உஷ்ண
மானது, பசையற்றது, பலத்தைக்கொடுக்கும், சுவாஸம், வாதநோய்
இவைகளைப் போக்கும், புளிப்பு, காரம், மதுரம் குணமுள்ளது,
இலகுவானது,ஒற்றைக்குளம்புள்ளப்பிராணிகளின் பாலும் இக்குண
மையுள்ளது, கழுதைப்பால்—சுவாஸம், வாதநோய், கபநோய், காஸ
நோய், பாலர் ரோகங்கள், இவைகளைப் போக்கும், அல்ப புளிப்பு,
டப்பு, குணமுள்ளது, ருசி, காந்தி, இவைகளைக் கொடுக்கும். ஸ்திரீ
ளின் பால்—இலகுவானது, குளிர்ச்சியானது, தீபனம், வாதபித்த

ஹரம், கண்வலி, தாக்கு, இவைகளைப்போக்கும், நாசிதுவாரங்களில் நஸ்யமாகவும் கண்களில் விடும் மருந்தாகவும், உபயோகிக்கலாம். புலப்பம், மயக்கம், கிறுகிறுப்பு, எரிச்சல், தர்கம் இவைகளுடன் கூடிய சன்னிக்காய்ச்சல் முலைப்பாலைச் சாப்பிடுவதால் குணமாகும். ருத்திராக்ஷத்தைப் பாலில் கலக்கிச்சாப்பிடலாம். யோகஸாரம் என்ற நூல் கூறுவதாவது— தோஷக்காய்ச்சல் (அதாவது ஜன்னிக் காய்ச்சல்) அதிசாரம், சூலநோய், கிரஹணீ, பாண்டு, க்ஷயம், மூலம் வீக்கம், மந்தாக்னி, அரோசகம், ஒக்காளம், பீனசம், கிருமிநோய், பவுந்தரம், உதாவர்தம் (வாய்வழியாக மலம்வரும் நோய்) காலரா, ஆகிய இவைகளில் முலைப்பால் நன்மைசெய்யும், முலைப்பால் மதுர மானது, கொஞ்சம் துவர்ப்புள்ளது, குளிர்ச்சியானது, நஸ்யத்திற் கும் கண்களில் விடுதவற்கும் உப்யோகமானது, ஜீவனம், இலகு, தீபனம். தாரோஷ்ணப்பால்—அதாவது பால் கரக்தவுடன் அந்தச் சூட்டுடன் இருக்கும் பாலுக்கு தாரோஷ்ணம் எனப்பெயர், நமது நாட்டில் நுரையுடன் பாலைச்சாப்பிடுவதென்பது வெகுநாளைய வழக் கம், அதன் குணங்கள் சொல்லப்படுகின்றன—பசுவின்பாலைக்காந்த சூட்டுடன் (நுரை பாலாக) சாப்பிடுவது நல்லது, எருமைப்பாலை நுரை யாறினபிறகு அதாவது காந்த சூடு ஆறினபிறகு பச்சைப் பாலாகச் சாப்பிடுவது நல்லது: செம்மறியாட்டுப்பாலைக் காயவைத் துச்சூட்டுடன் சாப்பிடுவது நல்லது, வெள்ளாட்டுப்பாலைக் காய வைத்து ஆறி குளிர்ந்தபிறகு சாப்பிடுவது நல்லது, எருமைப் பால் பித்தஹரம், செம்மறியாட்டுப்பால் வாதஹரம், பசும்பால் வாத் பித்தஹரம், வெள்ளாட்டுப்பால் திரிதோஷஹரம். பசுவின் தாரோ ஷ்ணப்பால் வாதப்பிரகோபத்தைத் தணிக்கும், புஷ்டியைக் கொடுக் கும், பாண்டு, காமாலை. இவைகளை நீக்கும், மெலிந்தவர்களுக்குச் சீக்கிரமாகப் பலத்தைக் கொடுக்கும், நல்ல அழகைக் கொடுக்கும், சரீரத்திலுள்ள எரிச்சல், கண் எரிச்சல், கால் எரிச்சல், பித்தாதிக் யம், கெட்ட ரக்தம் , மெலிவு, மெலிவால் எற்படும் வியாதிகள் இவை அனைத்தையும் விலக்கும், காய்ச்சாத பச்சைப்பால்—இது கபத்தைச்செய்யும், குரு, ஆமம் செய்யும், பசுவின்பால், எருமைப் பால் நீங்கலாக மற்றவகையான பச்சைப்பால் அபத்யமாகும், காய்ச்சி

சூட்டுடன் இருக்கும் பாலைச்சாப்பிட்டால் கபவாதஹரமாகும், காய்ச்சி பிறகு ஆறினபால் பித்தத்தைப் போக்கடிக்கும். பாதி ஜலத்தைச்சேர்த்து நீர் முழுவதும் வற்றும்படி காய்ச்சினபால் பச்சைப் பாலைவிட மிகவும் இலகுவானது, ஹிதமானது, பாலைக்காய்ச்சாமல் பத்து நாழிகை அதாவது நான்கு மணிநேரம் வைத்திருக்கலாம், காய்ச்சினபாலை எட்டு மணிநேரம் வைத்திருக்கலாம், இதற்குமேல் வைத்திருந்த பாலை உபயோகிக்கக்கூடாது. அதாவது பாலின் ருசி மாறாமல் இருக்கும்வரையில் அந்தப்பாலை உபயோகிக்கலாம், பழைய காய்ச்சலில் கபம் பூர்ணமாக நிவர்த்தியானபிறகு பாலை உபயோகித்தால் அமிருதமாகும், அதே பாலை முற்றின காய்ச்சலில் கொடுத்தால் விஷமாகும், நான்கில் ஒரு பங்கு ஜலம் சேர்த்து ஜலம் வற்றும்படி காய்ச்சினபால் மிகவும் நல்லது, சகல ரோகங்களையும் போக்கும், பலம், புஷ்டி, இவைகளைக் கொடுக்கும். ஓஜஸ்ஸையும் விருத்தி செய்யும். (குறிப்பு—ஓஜஸ் என்பது ஹிருதயத்தில் உள்ள ஓர் திரவவஸ்து, 7, 8 பிந்துக்கள் அளவுள்ளது, வியாதி முதலியவைகளில் அது அளவு குறையும், முழுவதும் குறைந்தால் மரணம் சம்பவிக்கும்.) முற்பகலில் பால் உட்கொண்டால் பலம், புஷ்டி, அக்னி விருத்தி, ஆகிய இவையுண்டாம், நடுப்பகலில் பால் பலம், ருசி, இவைகளைக்கொடுக்கும், நீர் சுருக்கு, கல்லடைப்பு, இவைகளை நீக்கும், பாலர்களுக்கு அக்னி பலத்தையும், க்ஷயரோகிகளுக்கு பலத்தையும், வயதானவர்களுக்கு சுக்ர பலத்தையும், கொடுக்கும், ராத்திரியில் பால் சாப்பிட்டால் பலவிதமான ரோகங்களை விலக்கும், இரவில் எல்லோரும் பால் சாப்பிடுவது நலம், ஆரம்பக்காய்ச்சல், மந்தாக்னி, ஆமநோய்கள், குஷ்டம், சூலம், கபநோய், காஸம், அதிசாரம், ஆகிய இவைகளில் பால் சாப்பிடக்கூடாது, கிருமி தோஷத்தை விருத்திசெய்யும், சர்க்கரையுடன் சேர்த்துச் சாப்பிட்டால் கபம் உண்டாகும், வாதம் போம், ஜீனி, கல்கண்டு, இவைகளுடன் சேர்த்துச் சாப்பிட்டால் சுக்ரவிருத்தி யுண்டாகும், தோஷங்களை விலக்கும், வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட நீர் சுருக்கு போம், கப பித்தம் செய்யும், காய்ச்சாதே பச்சைப்பாலைச் சாப்பிடக்கூடாது, காய்ச்சினபோதிலும் உப்புடன் சேர்த்துச் சாப்பிடக்கூடாது, மாவு பண்டங்கள், சாராயம் முதலியவை, துவர்ப்பு, பாசிப்பருப்பு, பீர்க்கு

கிழங்குகள், பழங்கள் முதலியவைகளுடன் சேர்த்துச் சாப்பிடக் கூடாது, இனி பாலுடன் சேரக்கூடிய வஸ்துக்களைச் சொல்லு கிறோம்—மாப்பழம், திராக்ஷை, தேன், நெய், வெண்ணை, சுக்கு, திப்பிலி, மிளகு, சர்க்கரை, அவல், இந்துப்பு, புடல், இஞ்சி, கடுக் காய். இவைகள் பாலுடன் சேரக்கூடும், மதுரவர்க்கமென நூல் களில் கூறப்பட்ட வஸ்துக்களில் மேலே சொன்ன வஸ்துக்கள் மாத்திரம் பாலுடன் சேர்க்கக்கூடியவை, புளிப்பு வர்க்கங்களில் நெல்லிக்காய், மதுர வர்க்கங்களில் சர்க்கரை, சாகவர்க்கங்களில் புடல், காரவர்க்கங்களில் இஞ்சி, துவர்ப்பு வர்க்கங்களில் யவதானி யம், உப்பு வர்க்கங்களில் இந்துப்பு ஆகிய இவை பாலுடன் உறவு உள்ளவை, இனி பாலுக்குச்சத்துருக்கள்சொல்லப்படுகின்றன-மீன் மாமிசம், வெல்லம், பாசிப்பருப்பு, முள்ளங்கி இவைகளுடன் சேர்த் துப்பாலை உபயோகித்தால் குஷ்டரோய் காணும், சாகங்கள், அதா வது கீரை வர்க்கங்கள், நாவல், கள்ளு முதலியவை, ஆகிய இவை களுடன் சேர்த்துப்பாலை உபயோகித்தால் மரணத்தை விளைவிக் கும், பாலுடன் சேர்த்து உஷ்ணமான திரவவஸ்துக்கள் அல்லது கடின வஸ்துக்கள் இவை உபயோகிக்கக் கூடாது, முள்ளங்கி முத லியவைகளும், நல்லெண்ணை, புண்ணாக்கு, கடுகு. விளாம்பழம், நா வல், எலுமிச்சம்பழம், பலாப்பழம், கொம்மட்டி மாதளை, மூங்கில் குருத்து, இலந்தைப்பழம், வாழைப்பழம். புளிப்பு மாதளை, பில்வப் பழம், ஆகிய இவைகளும், இவைபோன்றவைகளும் பாலுடன்சேர்த் துச்சாப்பிடக்கூடாது, (குறிப்பு—பால் சாப்பிட்டபிறகு சிலநாழிகை கழித்து இவைகளையோ அல்லது இவைகளைச் சாப்பிட்ட பிறகு சில நாழிகை கழித்துப்பாலையோ சாப்பிடலாம், சேர்த்துச் சாப்பிடக் கூடாது.) சேர்த்துச் சாப்பிட்டால் காது செவிடாகும், கண் பார் வை குறையும், நிறம் மாறும், வாய் பேசமுடியாமல் போகும், மரண மும் சம்பவிக்கும். பால் ஏட்டின் குணம்—பாலைக்காய்ச்சினால் அதன்மேல் உண்டாகும் வஸ்து ஏடு அல்லது ஆடை என ச் சொல்லுவார்கள். அது குருவானது, குளிர்ச்சியானது, தாது பலத் தைக்கொடுக்கும், ரக்தபித்தம், வாதரோய், இவைகளைப் போக்கும். தயிரின் குணம்—பசுவின் தயிர் மிகவும் உத்தமம், பலம் கொடுக் கும், மதுரம், ருசியைக்கொடுக்கும், சுத்தமானது, தீபனம், பசை

யுள்ளது, புஷ்டியைச் செய்யும், வாதஹரம், எருமைத்தயிர்—மிகவும் பசையுள்ளது, கபத்தை விருத்திசெய்யும், வாதபித்தஹரம், மதுரவிபாகம், கபத்தை இளகச்செய்யும், தாதுவிருத்தி செய்யும், குரு, ரக்தத்தைக் கெடுக்கும். வெள்ளாட்டுத்தயிர்—உத்தமம், மலபந்தம் செய்யும், இலகுவானது, திரிதோஷஹரம், சுவாஸம், காஸம், மூலம், க்ஷயம், மெலிவு இவைகளுக்கு நல்லது, தீபனம், பச்சைப்பாலைக் கடைந்து வெண்ணெயை எடுத்துவிட்டபிறகு அந்தப்பாலை தயிர் செய்தால் அதன் குணம்—மலபந்தம் செய்யும், துவர்ப்பானது, வாயுவைச்செய்யும், இலகுவானது, குழாய்களில் ஸ்தம்பனம் செய்யும், தீபனம், ருசியைக்கொடுக்கும், கிரஹணியில் நன்மைசெய்யும், மந்தததி-அதாவது காலையில் பாலைக்காய்ச்சி அதைத்தயிராக்கி சாயங்காலத்தில் உபயோகிப்பது, இதற்கு சாமானியமாக இளம் தோய்த்த தயிர் என்று வாடிக்கையில் சொல்லுவார்கள். இதன் குணம்—விதாஹம் செய்யும் (குறிப்பு—விதாஹம் என்பது ஓர் வைத்திய பரிபாஷை சொல். சில வஸ்துக்கள் அதாவது மாவு பண்டம் போன்ற சில வஸ்துக்கள் இரைப்பைக்குப்போய் அங்கிருந்து சிறு குடலுக்குச்செல்லும் நடுவழியில் இயற்கையான காலத்தில் ஜீர்ணமாகாமல் போவதுடன் ஜீர்ணகாரி உறுப்புகளையும் மந்தப்படுத்தி பிறகு நேரம்கழித்து ஜீர்ணத்தை யடையும், இவைகளை விதாஹி என்று நூல்கள் கூறுகின்றன.) மலமூலத்திரங்களைக் கழிக்கும், திரிதோஷங்களைப் போக்கும், கெட்டி தயிர் பால்போலவேயிருக்கும். ஆனால் பாலைவிட சற்று கெட்டியாக விருக்கும் வெளிப்படையான ருசி இருக்காது, தயிருடன் சர்க்கரை சேர்த்துச்சாப்பிட்டால் மிகவும் நல்லது, தாகம், ரக்தபித்தம், எரிச்சல், இவைகளை நீக்கும். வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாதஹரம், புஷ்டியைச்செய்யும், தர்பணம் அதாவது திருப்தியைச் செய்யும், குருவானது, இரவில் தயிரைச்சாப்பிடக்கூடாது, நெய் சர்க்கரை இவைகளைச் சேர்க்காமல் தனியாகத் தயிரை உபயோகிக்கக் கூடாது, பாசிப்பயறு, தேன் நெல்லிக்காய், இவைகளில்லாமல் தயிரை உபயோகிக்கக்கூடாது, உஷ்ணமாக உபயோகிக்கக்கூடாது, இரவில் தயிரை உபயோகிக்கக் கூடாது, அப்படி உபயோகிக்க நேர்ந்தால் நீர், நெய், இவைகளைச் சேர்த்து உபயோகிக்கவும், ரக்தநோய், பித்தநோய், கபநோய், இவைகளில் உபயோகிக்கக் கூடாது, நீர்ச்சுருக்கு, பீனசம், குளிர்சுரம்,

அதிசாரம், அரோசகம், மெலிந்த உடம்பு, இவைகளில் பகல்நேரத்தில் உபயோகிக்கலாம். மார்கழி, தை, மாசி, பங்குனி, ஆவணி, புரட்டாசி, இம்மாதங்களில் தயிர் உபயோகிக்கவேண்டும். ஐப்பசி, கார்த்திகை, ஆனி, ஆடி, சித்திரை, வைகாசி, இம்மாதங்களில் அநேகமாகத்தயிர் உபயோகிக்கக் கூடாது. தயிரைத்துணியில் கட்டித் தொங்கவிட்டால் முத்துபோன்ற நீர் சொட்டும். அதற்கு மஸ்து எனப்பெயர், அதன் குணம்—சிரமத்தைப் போக்கும், பலத்தை யளிக்கும், இலகுவானது, ஆகாரத்தில் அவாவை உண்டுபண்ணும், சரீரத்திலுள்ள குழாய்களைச் சுத்திசெய்யும், மனதிற்குஇன்பத்தை யளிக்கும், கபவாதஹரம், தாகத்தைச் சமனம் செய்யும், தாதுபுஷ்டிக்கு விருத்தமானது, பிரீதியைக் கொடுக்கும், மலபந்தத்தை சீக்கிரம் நிவர்த்திசெய்யும். தயிர்மேல் இருக்கும் ஆடையின் குணம் —தயிரின்மேல் படர்ந்திருக்கும் சற்று கெட்டியான வஸ்து ஆடை எனப்படும். அதில் எண்ணை சத்து அதிகம் இருக்கும்,தயிரிலிருந்து வடிந்துவரும் நீர் மஸ்து எனப்படும். ஆடையின் குணம்--மதுரமானது, குரு, தாதுபுஷ்டியைச் செய்யும், வாதஹரம், அக்னி பலத்தைக்கெடுக்கும், மூத்திரப்பையை ஊதச்செய்யும், புளித்த ஏப்பம், கபம், இவைகளைச் செய்யும். மோரின் குணம்—தயிரிலிருந்து செய்யப்படும் மோர் நான் குவிதமாகும். கோலம், மதிதம், உதச்வித், தக்ரம், என நான்கு வகையாகும், தண்ணீர் விடாமல் ஆடையுடன் இருப்பது கோலமாகும், ஆடையை நீக்கியது மதிதம் ஆகும், நானில் ஒருபங்கு நீர்சேர்ப்பது தக்ரம் எனப்படும், பாதியளவு நீர்சேர்ப்பது உதச்வித் எனப்படும், திவோதாஸர் முதலியவர்கள் (திவோதாஸர் என்பது சுசுருதருடைய மற்றொரு பெயர்) பாதியளவு நீர் சேர்த்தது தக்ரமென்றும், கால்பாகம் ஜலம்சேர்த்தது உதச்வித் என்றும் கூறுகின்றனர். (குறிப்பு—இந்த நான்குவகைகளும் மத்து முதலியவைகளைக்கொண்டு கடைந்துவிடவேண்டும். வெண்ணை யெடுக்கக்கூடாது. தற்காலம் வெண்ணை எடுத்த மோரை நாம் உபயோகிக்கின்றோம்' அதன் குணமென்னவென்று சிலர் கேழ்க்கலாம், நூலில் அந்த விஷயம் இல்லாவிட்டாலும் "மதிதம்" என்ற மோர் வகையின் குணத்தில் தாழ்ந்த குணமுள்ளதாக இந்த மோரைக்கருதவேண்டும்.) கோலம் வாத பித்தஹரம், மதிதம் கபபித்த

ஹரம், தக்ரம், திரிதோஷங்களைப் போக்கும், உதச்வித் கபம்செய்யும், பசுவின் தக்ரம், தீபனம், மூளைக்கு நல்லது, மூலம், திரிதோஷம் இவைகளை நீக்கும், குன்மம், அதிசாரம் ப்லீஹை, கிரஹணீ, ஆகிய இவைகளுக்கு நல்லது, எருமைமோர்—கபம் செய்யும், கெட்டியானது, குருவானது, வீக்கத்தை உண்டு பண்ணும், வெள்ளாட்டு மோர்—மிகவும் பசையுள்ளது இலகுவானது, திரிதோஷஹரம், குன்மம், மூலம், கிரஹணீ, வீக்கம், பாண்டு, இந்நோய்களை நீக்கும், வாதநோயில் புளித்த மோரில் உப்பு சேர்த்துச்சாப்பிடவேண்டும், பித்தநோயில் புளிக்காத மோரை சர்க்கரைசேர்த்து உபயோகிக்கவேண்டும், கபநோயில் திரிகடு, உப்பு, சேர்த்தும் வெண்ணெயை விலக்கியும், உபயோகிக்கவேண்டும், நீர்ச்சுருக்கில் மோரை வெல்லத்துடன் உபயோகிக்கவேண்டும், பாண்டு நோயில் கொடிவேலியுடன் சாப்பிடவேண்டும், கோலம் என்ற மோரில் (அதாவது தண்ணீர் விடாமல் ஆடையுடன் கடைந்த மோரில்) பெருங்காயம், ஜீரகம், இந்துப்பு சேர்த்துச் சாப்பிட வாதநோய் சீக்கிரம் சமிக்கும். (குறிப்பு—இங்கு சொல்லப்படும் வாதநோய் என்பது இரைப்பை குடல்களிலுள்ள வாயு என்பது பொருள்) மூலம் அதிசாரம், இவைகளுக்கும் நல்லது, ருசியைக் கொடுக்கும், புஷ்டி, பலம், இவைகளை யளிப்பதுடன் மூத்திரப்பையின் வலியையும் விலக்கும், பனிகாலம், அக்னிமந்தம், கபநோய், வாதநோய், அரோசகம், குழாய்களில் தடை, ஆகிய இவைகளில பொதுவாக மோர் மிகுந்த நன்மைசெய்யும். மோர் விலக்கவேண்டிய நோய்களாவன—விரணம், உஷ்ணகாலம், மெலிந்த உடம்பு, மூர்ச்சை, கிறுகிறுப்பு, எரிச்சல், ரக்தபித்தம், ஆகிய இவைகளில் மோரை விலக்கவேண்டும், மோரை உப்புடன் சேர்த்துச்சாப்பிட கிரஹணீ நோயில் அருசி போம், உப்பில்லாமல் மோரை உபயோகித்தால் கிரஹணீ, மூலம், ஆகிய நோய்கள் உண்டாகும், மோரில் எட்டு குணங்கள் காணப்படுகின்றன, அவையாவன—பசியைக்கொடுக்கும், கண்நோய் தீரும், ஜீவசக்தியை யளிக்கும், ரக்தம், மாமிசம் இவைகளை விருத்திசெய்யும், ஆமநோய், கபநோய், வாதநோய், இவைகளைப் போக்கும், சுடவைத்த அல்லது கொதிக்கவைத்த மோரின் குணங்கள்—பச்சை மோர் வயிற்றிலுள்ள கபத்தைப்போக்கும், ஆனால் தொண்டையில்

கபத்தை உண்டுபண்ணும், ஆகவே பீனசம், சுவாஸம், காஸம்,இவை முதலிய கபரோய்களில் கொதிக்கவைத்த மோரே நல்லது, மோரை வாடிக்கையாகச்சாப்பிட்டு வருபவனுக்கு சிரமம் அல்லது ஆயாசம். களைப்பு, உண்டாகாது, மோர் சாப்பிடுபவர்களுககு வியாதி அறிவப் படாது, தேவர்களுக்கு அமிருதம் முக்கியமானதுபோல மனிதர் களுக்கு மோர் முக்கிய உணவாகும், தக்ரத்தைக்காட்டிலும் மந்தம் இலகுவானது, மந்தம் என்பது தக்ரத்தால் செய்யப்படும் பக்வம். கூர்சிகா என்பது கோலம்போன்றது, எருமை முதலிய பிராணி களின் மோர் அந்தந்தபிர்களின் குணத்தை ஒத்திருக்கும், (இனிமோரின் பெருமை பேசப்படுகிறது) கைலாசத்தில் மோர் கிடைத்திருந்தால் பரமசிவன், நீலகண்டராக இருக்க மாட்டார், அதாவது அந்த விஷபானத்தை விலகி கழுத்திலுள்ள நீலம்மாறி பழைய நிறம் வந்திருக்கும், வைகுண்டத்தில் மோர் கிடைத்திருந்தால் நாராயணன் சரீரத்தில் கருப்புநிறம் மறைந் திருக்கும் தேவேந்திரன் சரீரம் முழுதிலுள்ள விகாரமும், சந்திர னுக்கு க்ஷயரோயும், கணபதிக்குத் தொந்தியும், குபேரனுடைய குஷ்டரோயும், அக்னியின்எரிச்சலும்,இவையனைத்தும்மோர்கிடைக் காத காரணத்தில் ஏற்பட்டவையாகும், வெண்ணெயின் குணம்— பசுவின்வெண்ணெ குளிர்ச்சியானது. புஷ்டியைக் கொடுக்கும், நிறம் பலம் அக்னி இவைகளைக் கொடுக்கும். மலபந்தம் செய்யும், வாதம், பித்தம், மூலம், க்ஷயம், முகவாதம். காஸம், இவைகளுக்கு நல்லது. பாலர், விருத்தர், இவர்களுக்கு நல்லது,சிசுக்களுக்கு அமிருதம்போன் றது, எருமை வெண்ணெ— வாதகபங்களைச் செய்யும், குரு. எரிச் சல், பித்தம். சிரமம் இவைகளை நீக்கும், மேதஸ், சுக்ரம், இவை களை அதிகப்படுத்தும், வெள்ளாட்டு வெண்ணெ— திரிதோஷங்களைப் போக்கும், பசு, எருமை, இவைகளின் வெண்ணெயைவிட இது உயர்ந் தது, பாலைக்கடைந்து எடுக்கும் வெண்ணெயின் குணம்—மிகவும் பசையுள்ளது. கண்களுக்கு நல்லது, ரக்தபித்தம் போம். புஷ்டி யைச்செய்யும், பலத்தைக்கொடுக்கும், மலபந்தம் செய்யும், மதுரம், குளிர்ச்சியானது, புதிய வெண்ணெயின் குணம்—மதுரம், மலபந்தம் செய்யும், குளிர்ச்சியானது, இலகுவானது மூளைக்கு நல்லது, கொஞ்சம் துவர்ப்பு புளிப்புள்ளது, காரமென்னவெனில் மோ

ரின் அம்சம் சற்று கலந்திருப்பதே, பழைய வெண்ணெயின் குணம் —உப்பு, காரம், புளிப்பு, ஆகிய இக்குணமிருப்பதால் வாந்தி; மூலம் குஷ்டம், கபம், இவைகளைச்செய்யும், குரு, மேதஸ்ஸை அதிகப் படுத்தும், இனி நெய்யின் குணம் சொல்லப்படுகிறது, பசுவின்நெய் —புத்தி, நிறம், ஜீரணசக்தி, பலம், மேதை, (புத்தியின் பேதம்) சுத்தி, இவைகளைக் கொடுக்கும்; வாதத்தைப் போக்கும், சிரமத்தை நீக்கும், குவனியைக்கொடுக்கும், பித்தம் போம், புஷ்டி, அக்னி பலம், இவைகளைக் கொடுக்கும், மதுர விபாகம் உள்ளது, (விபாகம் என்பது வைத்திய பரிபாஷை சொல், அதாவது நாம் சாப்பிடும் அறுசுவையான ஆகாரம், ஜாடராக்னி சம்பந்தத்தால் பற்பல ருசி களாக மாறிக் கடைசியாக ரக்தத்தில் கலக்கும்பொழுது நிலையாக நிற்கும் சுவை நிலை விபாகமெனப்படும்) தாதுபுஷ்டியைக் கொடுக் கும், சரீரத்தைச் சீர் குலையாமல் நிலைக்கவைக்கும், புது வெண்ணெ யை உடனே நெய்யாகக்காய்ச்சி (இதை புத்துருக்கு நெய் எனச் சாமான்யமாகச் சொல்லுவார்கள்) உபயோகிக்க பல குணம் உண் டாம், பசுநெய் அமிருதம்போன்றது, விஷத்தைப்போக்கும், கண் களுக்கு நல்லது, ஆரோக்யத்தை யளிக்கும், தாதுபுஷ்டியைச் செய் யும், முக்கிய ரஸாயனம், மிகவும் மூளைக்கு நல்லது, ஸ்நேஹங்களுக் குள் முதன்மையானது, எருமை நெய்யின் குணம்—இது சிரேஷ் டமானது, சந்தோஷத்தைக் கொடுக்கும், சௌக்கியத்தைக் கொடுக் கும், நிறத்தையளிக்கும், வாத கபங்களைப்போக்கும், பலம் கொடுக் கும், மூலம், கிரஹணீ, இவைகளைப்போக்கும், மந்தாக்னியை அதி கப்படுத்தும், கண்களுக்கு நல்லது, பசுவின் புத்துருக்கு நெய்மற்ற நெய்யைவிட மனதுக்கு இன்பமானது, ஹிருதயத்திற்கு நல்லது, வெள்ளாட்டு நெய்-தீபனம், கண்களுக்கு நல்லது பலத்தைக் கொடுக் கும் , காஸம், சுவாஸம், க்ஷயம், இவைகளில் நன்மைசெய்யும், ஸ்நேஹபானத்திற்கு நல்லது, இலகுவானது, செம்மறியாட்டுநெய்- மிகவும் குருவானதால் இதை மிருது சரீரிகள் விலக்கவேண்டும், ஒட்டகைநெய்—சாப்பிட்டவுடனேயே பலம், புஷ்டி, இவைகளைக் கொடுக்கும், வீக்கத்தைப் போக்கும், புதிய நெய்யின் குணம்— ஆகாரத்திலும், கண்களுக்கு விடும் மருந்திலும், ஆயாசம் மிகுந்த காலத்திலும், பலக்குறைவிலும், பாண்டு, காமாலை, கண்நோய், ஆகிய

இவைகளிலும் புதிய நெய்யை உபயோகிக்க வேண்டும், இனி பழைய நெய்யின் குணங்கள் சொல்லப்படுகின்றன—பத்து வருஷம் வைத்திருந்த நெய் பழையநெய் எனப்படும், இது மிகவும் உயர்ந்தது (மருந்து செய்வதற்கு மாத்திரம் உபயோகிக்கவேண்டும்) திரிதோஷங்கள், திமிரநோய் இவைகளுக்கு நல்லது, மூர்ச்சை, குஷ்டம், விஷம், பைத்தியம், கிரஹங்கள் அதாவது பேய்பிசாசங்கள், அபஸ்மாரம், இவைகளுக்கு நல்லது, பத்து வருஷங்களுக்கு மேல் பட்ட நெய் ரஸாயனமாகும், நூறு வருஷங்கள் கழிந்த நெய்க்கு "கும்பநெய் எனப்பெயர். (குறிப்பு—சில நூல்களில் பத்துவருஷம் கழிந்த நெய்க்குக்கும்பநெய் எனப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது) இது பூதங்களின் தொந்திரவைமாற்றும், நூறுவருஷங்களுக்குமேல் வைக்கப்பட்ட நெய்க்கு "மகாக்ருதம்" எனப்பெயர், இது மகா குணமுள்ளது, அரசர்கள் உபயோகிக்கக் கூடியது, இன்னும் வருஷங்களாக ஆக குணம் அதிகப்படும், இதைச்சாப்பிடக் காலை நோய் தீரும், கண்களில் இடநேத்ர ரோகங்கள் போம், தலையில் தேய்த்துக்கொள்ளக பூத்துக்குமேல் காணப்படும் ரோகங்கள் தீரும், இனி வியாதிகளையொட்டி நெய்க்கு விலக்கு சொல்லப்படுகிறது—ராஜயக்ஷ்மா, பாலர், விருத்தர், கபநோய், ஆமநோய், காலரா, குழாய்களில் தடை, மதாத்யயம், ஜ்வரம், மந்தாக்னி, பிரமேஹம், ஆகிய இவைகளில் நெய் கூடாது, இனி எண்ணெ குணங்கள் சொல்லப்படுகின்றன—எண்ணெ முழுவதுமே வாதத்தைப் போக்கும், அதிலும் விசேஷித்து நல்லெண்ணெ வாதத்தைப் போக்கும், நல்லெண்ணெயை மருந்துகள் சேர்த்துக் காய்ச்சித் தைலமாக உள்ளும் வெளியிலும் உபயோகிக்க சகல நோய்களும் தீரும், நல்லெண்ணெயின் குணம்—கூந்தலுக்கு அழகைக்கொடுக்கும், மதுரம், கசப்பு, துவர்ப்பு உஷ்ணம், தீக்ஷ்ணம், பலத்தைக் கொடுக்கும், கபம், வாதம், கிருமி, அரிப்பு, விரணம், இவைகளை நீக்கும், காந்தியைக் கொடுக்கும், அரிப்பைப் போக்கிக் காந்தியைக் கொடுக்கும். (குறிப்பு—இந்நூலை பல கிரந்தங்களிலுள்ள சுலோகங்களையே பெரும்பாலும் எடுத்துச் சேர்த்துத் தொகுத்திருப்பதால் சில இடங்களில் ஏற்கனவே சொன்ன விஷயங்கள் திரும்பித் திரும்பி சொல்லப்படும், சில இடங்

களில் முன்னுக்குப்பின் முரணாகவும் இருக்கும். ஆகவே வாசகர்கள் ஒரே விஷயம் திரும்பித் திரும்பி வருகிறதே யென்று நினைக்கக் கூடாது, விரோதமாகத் தோன்றும் இடங்களில் பல கிரந்தங்கள் வெவ்வேறு விதம் அபிப்பிராயப்படுவதாகவும் கொள்ளவேண்டும்.) மலத்தை அதிகப்படுத்தும், விரணங்களை ஆற்றும், எள்ளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெ பாலர்கள், விருத்தர்கள், எல்லாருக்குமே நன்மையளிக்கும், நல்லெண்ணெ பித்தரோகம், ரக்தரோகம், மகாவாதங்கள் அதாவது பக்ஷவாதம் முதலியவை, ஆகிய இவைகளில் கூடாது. வாயுவை பொட்டிய சகல ரோகங்களையும் விலக்கும். ஆமணக்கு எண்ணெ—இது பலத்தைக் கொடுக்கும், குரு உஷ்ணமானது, மதுரம், ஸர்வாங்க வியாபி, கசப்பானது, பித்தம் செய்யும், தார்காற்றமுள்ளது, விசேஷித்துச் சிகப்பு ஆமணக்கு எண்ணெ குமட்டலைக் கொடுக்கும், ஆமணக்கு எண்ணெ, கிருமிகளைப்போக்கும், எல்லா வலிகளையும் தணிக்கும், குஷ்டரோய்க்கு நல்லது, ரஸாயனம், பித்தம் தணியும், அண்டவாயு, குன்மம், கப நோய், மகோதரம், முறைக்காய்ச்சல், இவைகளைத் தணிக்கும், வாத சூலங்களுக்கு விம்ஹம் போன்றது, கடுகு எண்ணெ—கிருமிகளைப் போக்கும், குஷ்டம், அரிப்பு, இவைகளைப் போக்கும், இலகுவானது. ரக்தபித்தம் செய்யும், மேதஸ், கர்ணரோய்கள், கழுத்துப்பிடிப்பு, இவைகளைப் போக்கும். குஸும்ப எண்ணெ (குறிப்பு—குஸும்பம் என்பது வடமொழிப் பெயர், இதற்குத்தமிழ் தெரியவில்லை. இதை வடதேசத்திலிருந்து வரவழைத்து மதுரை, ஈதேசவைத்திய ஸபையார் மதுரையில் பயிரிட்டிருக்கின்றனர். இந்தச் செடி சுமார் இரண்டடி உயரம் வளர்ச்சியுள்ளது, புஷ்பங்கள் பார்வைக்கு அழகாக விருக்கிறது, விதை வெள்ளரி விதை போன்று இருக்கிறது இது பிரை வர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.) விஷ்டம்பி குணமுள்ளது, காரமான விபாகமுள்ளது, குரு, விதாஹி, திரிதோஷங்களைப் பிரகோபம் செய்யும். சிறு கடுகு தைலம்—இது கடுகு எண்ணெயின் குணமுள்ளது, நீர்கடுப்பு போம், அரிப்பு, சொரி கடி, கிருமி, இவைகளைப் போக்கும், தீக்ஷ்ணமானது, க்ஷௌமா முதலியவைகளின் எண்ணெ, க்ஷௌமா என்பது தமிழில் காயாம்பூ எனப் படும்) இவை கண்களுக்குக் கெடுதல், பித்தம் செய்யும். வாயுவைப்

போக்கும், தான்றி எண்ணெ—அபவாதஹரம், கூந்தலை வளர்க்கும், கண், காது, இவைகளுக்கு நல்லது, வேப்பம் எண்ணெ—குஷ்டம், விரணங்கள், மேஹம், கிருமிகள், இவைகளுக்கு நல்லது, வாலுளுவையரிசி தைலம்—பித்தம் செய்யும்: மேபாசக்தி, மூளை, இவைகளுக்கு நல்லது, தான்யங்கள் எண்ணெ—பொதுவாகத் தானியங்களை பக்வம்செய்து எடுக்கும் எண்ணெகளும், கொட்டையிலிருந்து எடுக்கும் எண்ணெயும், எள்ளு எண்ணெயின் குணமுள்ளவைகளாகும், அவைகளை மேலுக்குப்பூச அரிப்பு, தினவு, இவை நீங்கும், இனி தேன் குணங்கள் சொல்லப்படுகின்றன, தேன்—இது திரிதோஷஹரம், சன்னிபாதம் நீங்கும், விக்கல், சுவாசம், (ஆஸ்த்மா) கிருமி, வாந்தி, மயக்கம், தாஹம், விஷம், இவைகளைப் போக்கும், தேன் எட்டு வகையாகும், அவை யாவன—(1) மாக்ஷிகம் (ஈக்களால் சேகரிக்கப்பட்டது, (2) ப்ராமரம் (கதண்டுகளால் சேகரிக்கப்பட்டது, இது தேன்கூட்டிலிருந்து எடுப்பது கடினம், ஏனெனில் தேன் அடையில் உள்ள கதண்டுகள் அல்லது வண்டுகள் கூர்மையான முட்களால் மனிதனைத்தாக்கி மரணமடையச் செய்யும், அம்முற்கள் அதன் மூக்கில் அமையப்பெற்றுள்ளன.)(3)க்ஷௌத்ரம் (4)பௌதிகம் (5) சாத்ரம் (6) ஆர்க்யம் (7) ஔத்தாலகம் (8) தாலம் ஆக எட்டு வகையாகும், நல்லெண்ணெபோன்றுள்ளது மாக்ஷிகமாகும், ஸ்படிகம்போன்றுள்ளது ப்ராமரம் ஆகும், மஞ்சள் நிறமுள்ளது க்ஷௌத்ரமாகும், பௌதிகம் நல்லெண்ணெ நிறமுள்ளது, சாத்ரம் என்பது மஞ்சள் கலந்த கபிலநிறமாகும், ஆர்க்யம் என்பது வெண்மை கலந்த மஞ்சள் நிறமாகும்,ஔத்தாலகம் என்பதுமஞ்சள்கலந்த கபிலநிறமாகும், தாலகம் என்பது பல நிறமாக இருக்கும்,இவற்றுள் மாக்ஷிகம் என்பது உயர்ந்தது, கண்நோய் நீங்கும், இலகுவானது, பௌதிகம்—இலகுவானது, மலபந்தம் செய்யும், கபம் போம், வாதபித்தம் செய்யும்,க்ஷௌத்ரம் என்பது மாக்ஷிகத்தின் குணமுள்ளது, விசேஷித்துப் பிரமேஹம் போம், ப்ராமரம்—ரக்தபித்தம் போம், மூத்திரம், ஜாட்யம், இவைகளைச் செய்யும், குருவானது, புதியதேன்—கபத்தை உருக்கும், பசையுள்ளது, கபஹரம், ஸர்வாங்கவியாபி, பழைய தேன்—மலபந்தம் செய்யும், பசையற்றது, மேதஸ்ஸைக்குறைக்கும், மிகவும் கபஹரம், திரிதோஷம், க்ஷயம்,

## கீல்வாயு

(சோடனபுரம் ஸ்ரீநிவாசன்)

கீல்வாயு என்னும் வியாதி ஆரம்பிக்கும்பொழுது ஜுரமும் வருவது சகஜம், இந்த வியாதி ஆரம்பிக்கும்பொழுது மணிக்கட்டு முழங்கை, முழங்கால், தோள்கள், கணுக்கால், முதலிய இடங்களிலும் சில சமயம் இடுப்பிலும், சிறிது வீக்கமும் பொறுக்கமுடியாத வேதனையும் உண்டாகும், அதனால் நடக்கவோ உட்காரவோ முடியாமல் அதிக சிரமத்தைக் கொடுக்கும் இவ்வியாதியின் ஆரம்பத்தில் குளிரும், தொண்டையில் புண் ஏற்பட்டது போன்ற உணர்ச்சியும் கிணறு மாடிப்படிக்கட்டு முதலியவற்றில் ஏறுவதற்கு அதிக சிரமமாயும் வேலைசெய்வதில் மிகமான அசதியும். உண்டாகும், அதன் பிறகு சில நாட்களில் மேல் குறித்தபடி மூட்டுகளில் சிலவற்றில் வீக்கமும் உண்டாகும். ஷை வீக்கம் உண்டாகும் இடங்கள் சிவந்தும், சிறிய ரேகைகள் போன்ற தடிப்புகளுடனும் இருக்கும், ஒரு மூட்டில் ஏற்பட்ட வீக்கம் சில நாட்களில் வற்ற ஆரம்பிக்கும். ஆனால் வேறு ஏதாவது நன்றாயிருக்கும் மூட்டில் வீக்கமும் வலியும் உண்டாய் தொந்திரவைக் கொடுக்கும், இந்த வீக்கங்கள் தொடுவதற்கு மெதுவாகவும், அதிக வலியுடனும் இருக்கும், ஓர் மூட்டில் ஏற்பட்ட வீக்கம் வற்றினால் மற்றோர் மூட்டில் வீங்கி உபத்திரவிக்கும், இந்த வியாதியில் ஏற்படும் ஜ்வரம் அதிகக்கடுமையாயில்லாமல் இலேசாகவே இருக்கும், இவ்வியாதியில் முக்கியமாக ஓர்வித துர்நாற்றத்துடன் கூடிய வியர்வையும் ஏற்படும், சிறுநீர் மிகக்குறைந்தும் இருக்கும், அது சிகப்பு நிறமுடையதாயும் இருக்கும், அஜீர்ணமும், மலபந்தமும், வாயில் ஓர்வித துர்நாற்றமும், நாக்கு வரட்சியும், உண்டாகும், இவ்வியாதிக்கு மதுபானம், மிதமான ஆஹாரம், மாம்ஸம் நீர்பாங்கான பிரதேசங்களில் குடியிருப்பும், இல்லாமல் இருந்தால் சற்று உபத்திரவத்தைக் குறைவுபடுத்தும். இந்நோயின் சிகிச்சை- அதிக வலியும் வீக்கமும் இருக்கும்பொழுது அந்த இடங்களில் கோதுமைத்தவிட்டையாவது, கம்பங்களிடு, வண்ணான் சலவைக்கு உபயோகிக்கும் உவர்மண்ணையும், சரிபாதியாகக் கலந்துகொண்டாவது வறுத்து ஒற்றடம் கொடுப்பது நலம், பருகுவதற்கும், தேக சுத்திசெய்வதற்கும், சூடான ஜலத்தையே உபயோகித்தல் நலம், மலம் சரிவரக்கழிந்து வருகிறதா என்பதை அடிக்கடி கவனிக்க

வேண்டும், சரியாக வெளியாகாவிட்டால் இரண்டு அவுன்ஸ் பசும் பாலில் ஒன்றரை தேக்கரண்டி ஆமணக்கு எண்ணை சேர்த்துச் சிறிது சர்க்கரையும் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம், அல்லது சுக்கு கஷாயமாவது, நரம்புகளுக்கு அதிக அதிர்ச்சி ஏற்பட விரோசன ஔஷதங்களையேனும் உபயோகிக்கலாம், கலிங் என்னும் வரித்தும் மட்டிக்காய் எண்ணையை ஒன்றுவிட்டொரு கொடுத்துவர மூன்று முறையில் குணமாகும், இம்மருந்து கொ தால் விரோசன ஔஷதம் வேறொன்றும் தேவையில்லை, இது உசிதமாக விரேசனம் செய்துவைக்கும், பத்தியம் கோதுமை அ லதுபுழுங்கலரிசிக் கஞ்சியில் தேவையான அளவு பாலும் சிறிது சர் க்கரையும் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம். அதிக நாவுவரட் யுண்டானால் சிறுது எலுமிச்சம்பழ ரசத்தில் சூடான தண்ணி கலந்து சர்க்கரை கலந்து கொடுக்கலாம், ஆரஞ்சிப்பழங்களு கொடுக்கலாம். ஷை கலிங்காதி செய்முறை — சிற்றாமண கெண்ணை படி 1, கலிங்காதி என்னும் பேய்த்தும்மட்டிசார் படி மேல் கத்தாழைச்சார் படி 1, கடுக்காய், கடுக்காய்ப்பூ, மாச்சக்கா வாய்விளங்கம், சுக்கு வகைக்குக்கோலா 1, இந்துப்பு பலம் சுத்திசெய்தவாளம் கோலா அரை, இவைகளைத் தண்ணீர்விட் அரைத்துப்போட்டு காய்ச்சி பதத்தில் வடித்துக்கொண்டு சி. கரண்டி அளவு சரீரக்கூறுக்குத் தக்கபடி கொடுக்கலாம். சுபம்.

**திருச்சி ஆயுர்வேத ஸபை**—ஷை சபாவின் ஆதரவ 1944-ம் வரு ஜனவரி மீ 30உ ஞாயிற்றுக்கிழமைமாலை 4-½ மணி இவ்வருஷத்திய 2-வது மாதாந்தக்கூட்டம் திருச்சி ஆயுர்வே யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது, அன்று ஸ்ரீ T. V. ரா கிருஷ்ண சாஸ்திரிகள் M.A, L. I. M., "ஆயுர்வே அபிவிருத்திக்கேற்ற ஆராய்ச்சிகள்" என்பதுபற்றி வாக உபன்யஸித்தார்கள். அவ்வமயம் ஸ்ரீ L. V. மஹாதே சர்மா, வைத்ய விசாரத ஆயுர்வேத சிரோமணி, தலைமை தார்கள், எல்லா மெம்பர்களும்கூட்டத்துக்குவந்திருந்தார்கள், களுக்குள் சர்ச்சை ரஸத்துடன் நடந்தபின், வந்தனோபசாரத்து கூட்டம் மாலை 7-மணிக்கு இனிது முடிவுற்றது.

T. S. ஈஸ்வரன், ஸபாம

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |